# கொங்குதேர் வாழ்க்கை



3814

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

மு.வரதராசன்

PRESENTED BY:
V. M. RM. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

# கொங்குதேர் வாழ்க்கை

V. PR.
THIRU

3814

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

CHETTIARS' TAMIL
PAGANERI

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 1-0-0

இரண்டாம் பதிப்பு:
பிப்ரவரி 1956

உரிமை ஆசிரியர்க்கு

காக்ஸ்டன் அச்சகம்,
சென்னை - 1

க. 443

3814

# முன்னுரை

தமிழின் ஆக்கத்திற்குரிய அருந்தொண்டு பல ஆற்றிவந்துள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினொன்றும் ஆண்டு விழாவில் (19-2-1949-ல்) தலைமை தாங்கும் பொறுப்பை எனக்குப் பணித்தனர் சங்கத்தினர். அப்போது ஆற்றிய சொற்பொழிவை இந்நூல் வடிவாக வெளியிட்டுள்ளேன். இதற்குக் காரணமாக விளங்கிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கு நன்றியறிதலுடையேன்.

பு. வ.

# கொங்குதேர் வாழ்க்கை

## கற்பனையின் கலப்பு

கலை உலகில் மட்டும் கற்பனை இருத்தல் நல்லது என்பது இக்காலத்துப் போக்கு. பழங்காலத்தில் சமயம் முதலிய மற்றத் துறைகளிலும் கற்பனை இடம் பெற்றுக் கலந்து விளங்கியது.

ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வோர் எல்லை வகுத்துத் தனித்தனியே பகுத்து வளர்ப்பதே இக்காலத்துப் போக்கு. பழங்காலத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதவாறு எல்லாம் பிணைந்திருந்தன. பழங்காலத்து அறிவுநிலையைத் தொகுநிலை (synthetic stage) என்றும், இக்கால நிலையைப் பிரிநிலை அல்லது பகுநிலை (analytic stage) என்றும் அறிஞர் கூறுவர். இது பெரும்பான்மை பற்றிய கூற்று. பழங்காலத்திலும் பகுத்துணரும் கூர்த்த மதியினர் சிலர் இருந்தனர்; இக்காலத்திலும் துறைகளைத் தனித்தனியே பிரித்துணராமல் கூட்டிக் குழப்புவோர் உள்ளனர்.

## தெளிவு பெறல்

வரலாறு வேறு, கதை வேறு என இக்காலத்தில் பிரித்துணரும் முறை முன்னாளில் இல்லை. வரலாற்றில் கதையைச் சேர்த்துப் பிணைத்து வைத்த தன்மையைப் பழங்கால நூல்களில் காணலாம்; எல்லா நாட்டு

நூல்களிலும் காணலாம். இன்றோ கற்பனைகளான சிறுகதை, தொடர்கதை, நாடகம் முதலியன வேறு என்றும், நிகழ்ந்தவை கூறும் வரலாறு வேறு என்றும் பாகுபாடு தெளிவாக அமைந்துள்ளது. இவ்வாறு, வான நூல் (astronomy) வேறு என்றும், சோதிடம் (astrology) வேறு என்றும் இக்காலத்தில் உள்ள பகுத்தறிவு பழங்காலத்தில் இல்லை; இரண்டும் ஒன்றாகவே கூட்டிக் குழப்பப்பட் டிருந்தன. இவ்வாறே ரசாயனமும் (chemistry) ரசவாத வித்தையும் (alchemistry) பழங்காலத்தில் ஒன்றாகவே இருந்து பிற்காலத்தே பிரித்து உணரப்பட்டன. பாட்டு (கவிதை) வேறு, செய்யுள் வேறு என்ற தெளிவும் இக்காலத்தே அமைந்ததே ஆகும். எது பாட்டு, எது செய்யுள் எனப் பழங்காலத்தில் இவ்வளவு தெளிவாகப் பிரித்துணரப்படவில்லை.

இத் தெளிவு இல்லாத காரணத்தால்தான் உயர்ந்த கற்பனைகளோடு வரலாற்றுக் குறிப்புக்களும் வேறு பல விளக்கங்களும் ஆகிய எல்லாம் கலந்து பாடப் பட்டன. இக்காலத்தில் உணர்ச்சியும் கற்பனையும் மிகுந்தவற்றை மட்டும் பாட்டாகப் பாடுவது என்றும், மற்றவற்றை உரைநடையில் எழுதுவது என்றும் ஒரு வகைத் தெளிவு ஏற்பட் டிருக்கின்றது.

## கற்பனையும் சமயமும்

பழங்காலத்தில் சமயத்துறையில் கற்பனை மிகுதியாகக் கலந்து இருந்ததற்கும் அக்காலத்துப் போக்கே காரணமாகும். ஆதலால் அடுத்தடுத்து வந்த சமயச் சான்றோர்கள் அத்தகைய கற்பனைகளால் வளர்ந்த பொய்களையும் மூடநம்பிக்கைகளையும் போக்கி அடிப்

3814



படை உண்மைகளை மட்டும் விளக்கி இடையருமல் தொண்டு செய்ய நேர்ந்தது. பழங் காலத்தில் இள நங்கை ஒருத்தி காதல் காரணமாக மெலிந்து வாடிய போது பெற்ருேர் பூசாரியையும் கட்டுவிச்சியையும் அழைத்துக் காரணம் கேட்டு அவர்கள் சொன்னபடி தெய்வக் குற்றம் என நம்பி, ஆட்டை அறுத்து ஆர வாரம் செய்து முருகனுக்குப் பூசையிடும் வழக்கம் இருந்தது. கற்பனையுடன் கலந்த இத்தகைய மூடப் பழக்கங்களை ஒழிப்பதற்கு 'அன்பே கடவுள்' என்றும், 'தொண்டே பூசை' என்றும் இடைக்காலச் சான்ருேர்கள் எடுத்துரைத்து நாட்டைத் திருத்த வேண்டியிருந்தது. அவர்களுக்குப் பின்னும் மூட நம்பிக்கைகள் அடியோடு நீங்கிவிடவில்லை. அவர் களுக்கு முன்னும் மெய்யுணர்வு பெற்று வாழ்க்கையில் தெளிந்த சான்ருேர் ஒரு சிலரேனும் இல்லாமற் போகவில்லை.

'ஆருயிர் முறைவழிப் படூஉம்' என்று தெளிந்த பூங்குன்றனர் போன்ற சான்ருேர் ஒரு சிலர், பழங் காலத்திலும் இருந்தனர்; ஆயின் அவர்கள் ஒரு சிலரே. கற்பனை பலவாறு கலந்த சமயப் போக்கே அந்நாளில் மிகுதியாக இருந்தது.

**கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்**
**கொங்கு தண்குமரித்துறை ஆடிலென்**
**ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்**
**எங்கும் ஈசன் எனதவர்க் கில்லையே.**

**காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்**
**வேலை தோறும் விதிவழி நிற்கிலென்**
**ஆலை வேள்வி அடைந்தது வேட்கிலென்**
**ஏல ஈசனென் பார்க்கன்றி இல்லையே.**

நன்று நோற்கிலென் பட்டினி ஆகிலென்
குன்றம் ஏறி இருந்தவம் செய்யிலென்
சென்று நீரில் குளித்துத் திரியிலென்
என்றும் ஈசனென் பார்க்கன்றி இல்லையே.

என்று திருநாவுக்கரசரும்,

வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த் தினையே
ஏதமற உணர்ந்தனன் வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவும் எண்ணமிலேன் என்னொடுநீ புணர்ந்தே
தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெறஎவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினையென் றனக்கே
உலைவறுமிப் பொழுதேநற் றருணமென நீயே [தனனே
உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மையுரைத்
சிலைநிகர்வன் மனம்கரைத்துத் திருப்பொதுநிற் கின்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. [ஶ்ரேய்

என இராமலிங்க சுவாமிகளும் கூறும் கருத்துக்கள் இங்குப் போற்றிக் கருதத்தக்கன வாகும்.

## புராணங்கள்

கற்பனை கலந்த நூல் எதுவும் மக்களிடையே எளிதில் பரவுதல் இயற்கை. சமய நெறிகளை வேகமாகப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள், கற்பனையை மிகுதியாகக் கலந்து நூல்கள் பல

எழுதத் தொடங்கினர். வடநாட்டில் பதினெண் புராணங்கள் இவ்வாறு தோன்றினவே யாகும். அவற்றிற்கு அடுத்தபடி தலபுராணங்கள் தோன்றின. தமிழ் நாட்டிலும் இந்தப் போக்கு நாளடைவில் செல்வாக்குப் பெற்றது; புலவர்கள் பலர் இவ்வகையான நூல்களை இயற்றினர்.

ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூல் மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் பெருமையை எடுத்துரைப்பது. மதுரையை ஆண்ட பாண்டியர்களின் வரலாற்றின் ஒரு சிறு பகுதி இந்நூலில் உள்ளது; பெரும்பகுதி அந்த வரலாற்றுச் செய்திகளைத் திரித்தும் கூட்டியும் புதியன புனைந்தும் கூறும் கற்பனைகளாகும். இத்தகைய கற்பனைகளினூடே சமய உண்மைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைந்ததே ஹாலாஸ்ய மகாத்மியம். இதைத் தழுவிய மொழிபெயர்ப்பே தமிழில் திருவிளையாடற் புராணம் என்னும் நூல் ஆகும்.

## தருமியின் கதை

இப் புராணத்தில் வரும் கதைகளில் தருமிக்குப் பொற்கிழி அளித்தது ஒன்று.

தருமி என்று மதுரையில் ஓர் ஏழை அந்தணன் இருந்தான். அவன் தாயும் தந்தையும் இழந்து வறுமையால் நலிந்து வாழ்ந்துவந்தான். கோயிலில் அருச்சனை செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தான். திருமணம் செய்துகொள்ள விரும்பியும் வறுமையால் அதற்கு வழியின்றி வருந்தினன்.

**தந்தை தாயிலேன் தனியன் ஆகிய**
**மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்...**

**வடுவில் இல்லற வாழ்க்கை இன்றிநின்**
**அடிஅ ருச்சனைக் கருக னுவனே...***

என்று சிவபெருமானிடம் முறையிட்டு வந்தான்.

அந்நாளில் பாண்டியன் செண்பகமாறன் என்பவன் தன் துணைவியோடு இளவேனிலின் வெம்மை தீர நந்தவனத்தின் செய்குன்றில் சென்றிருந்தான். அப்போது நறுமணத்துடன் தென்றல்காற்று அசைந்து வந்தது.

**......ஈது வேறு**

**திவ்விய வாச மாக**
**இருந்தது தென்றல் காவில்**
**வெளவிய வாசம் அன்று**
**காலுக்கும் வாசம் இல்லை**
**எவ்வியல் வாச மேயோ**
**இதுஎன எண்ணம் கொள்வான்.**

“இந்த நறுமணம் புதிதாக உள்ளதே! இது காற்றின் மணம் அன்று; காற்றுக்கு மணம் இல்லை. நந்தவனத்தில் இந்த மணம் இல்லையே. ஏது இந்தப் புது மணம்?” என்று பலவாறு எண்ணினான். திரும்பிப் பார்த்தான். தன் துணைவியின் கூந்தலில் அந்த நறுமணம் கமழ்ந்ததை உணர்ந்தான். “இந்த நறுமணம் வண்டும் அறியாத புதுமணமாக இருக்கிறதே. இது இவளுடைய கூந்தலுக்கு இயற்கை மணமோ செயற்கை மணமோ?” என ஐயுற்றான். “என் ஐயத்தைத் தீர்க்கும் வகையில் உண்மையை ஆராய்ந்து அறிந்து பாட்டு இயற்றுவோர்க்கு ஆயிரம் பொன் அளிப்பேன்”

*பரஞ்சோதி திருவிளையாடல், 52 - 85, 86.

என்று பொற்கிழி ஒன்று தமிழ்ச்சங்க மண்டபத்தில் கட்டிவைத்தான்.

பாண்டியவேந்தனின் கருத்தில் எழுந்த ஐயத்தைத் தீர்க்க வல்ல பாட்டு ஒன்று கிடைத்தால் தன் வறுமையைத் தீர்த்துக்கொள்ள வழியாகுமே என அப்போது ஏழைத் தருமி எண்ணி ஏங்கினன். சிவபெருமானிடம் இந்த ஏக்கத்தைப் பற்றி முறையிட்டு வேண்டினன். அப்போது சிவபெருமான் அவனுக்குத் தந்த பாட்டே 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பழம்பாட்டு.

குறுந்தொகை

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறிஎயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோநீ அறியும் பூவே.**

இது குறுந்தொகை என்னும் சங்ககாலத் தொகை நூலில் இரண்டாவதாக உள்ள பாட்டு. நான்கடி முதல் எட்டடி வரையில் உள்ள அகப்பொருட் பாட்டுக்கள் நானூறு கொண்டது குறுந்தொகை. அவற்றைப் பாடிய புலவர்கள் இருநூற்றைவர். ஆங்காங்கே சிதறுண்டு கிடந்த பல பழைய பாட்டுக்களைத் தேடி ஆராய்ந்தெடுத்துத் தொகுத்து முடித்தவர் பூரிக்கோ என்பவர். அவர்க்குக் கிடைத்த பாட்டுக்களுள் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் இப்பாட்டும் ஒன்று. உயர்ந்த கற்பனையுணர்ச்சி அமைந்திருத்தலால், அவர் தேர்ந்தெடுத்த நானூறு பாட்டுக்களுள் இதையும் ஒன்ருகக் கொண்டார். தாம் தொகுத்தவற்றுள் இதனை இரண்டாவதாக அமைத்தார். இதைப் பாடியவர் பெயர் இறையனர்.

## கற்பனைகளைத் தூண்டியது

இந்தப் பழைய பாட்டு, பலருடைய உள்ளத்தில் பலவகைக் கற்பனைகளை எழுப்பியது. பாட்டு மட்டும் அல்லாமல், பாடிய புலவரின் பெயரும் கற்பனைகள் எழுவதற்குக் காரணமாக அமைந்தது. அந்தக் கற்பனைகள் என்னென்ன எனக் காண்போம்.

மதுரைச் சொக்கநாதர் தருமிக்குத் தந்து அனுப்பும் பாட்டாகக் கதையில் அமைவதற்கு ஒன்று தேவையாக இருந்தது. அந்தப் பாட்டு இன்னது என்று அறியப்படாததாகவே கதையில் சுட்டியிருக்கலாம். ஆனால், புலவர், குறுந்தொகை என்ற தொகை நூலைக் கற்றவர்; அந்த நூலில் 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாட்டு இறையனார் பாடியதாக இருத்தல் அவருடைய நினைவுக்கு வந்தது. இது சிவபெருமான் ஆகிய இறைவன் பாடியது என்று அவருடைய உள்ளம் தெளிந்தது. ஆகவே சொக்கநாதர் தருமிக்குத் தந்த பாட்டு இது என்று கதையில் சேர்க்க முனைந்தார்.

> பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
> கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
> பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி
> என்னுளம் குடிகொண் டிரும்பயன் அளிக்கும்
> கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்*

> வழுத்திய மறையோன் தன்மை
> கண்டவன் மனத்தின் ஆசை
>
> ஒழித்திடு வான்வி ரும்பி
> உரகமா ணிக்கச் செம்பொற்

*கல்லாடம், 1

*குழைக்கியை காதன் அங்கண்*
*கொங்குதேர் வாழ்க்கை என்றோர்*
*கிழிக்கிசை கவிதை பாடிக்*
*கொடுத்தனன் கீர்த்தி வேட்டு**

## கூந்தலின் தொடர்பு

பாட்டின் இறுதியில்,

*செறிஎயிற்று அரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோநீ அறியும் பூவே.*

என்ற அடிகள் தக்க காரணத்தோடு அமைய வேண்டுமே என்று எண்ணினர் புலவர். ஒரு நங்கையின் கூந்தலின் நறுமணத்தைப் பற்றிப் பாடியிருப்பதால் அது பாண்டியன் மனைவியாகிய கோப்பெருந்தேவியின் கூந்தலைப் பற்றியதாகவே இருத்தல் வேண்டும் என உணர்ந்தார். பாண்டியன் ஏற்படுத்திய பொற்கிழிக்கும் கோப்பெருந்தேவியின் கூந்தல் பற்றிய பாட்டுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கதையை அழகாகப் புனைந்தார்.

வேண்டுமென்றே பொய் சேர்த்துப் புனைவது அவர் நோக்கம் அன்று. ‘இவவாறுதான் இருந்திருக்கக் கூடும்’ என்று தம் உள்ளத்தால் உய்த்துணர்ந்து சேர்த்தது அது.

பாண்டியன் செய்குன்றில் அமர்ந்திருந்தபோது தென்றல் வீச, கோப்பெருந்தேவியின் கூந்தல் மணம் கமழ, அந்த மணம் இயற்கை மணமா செயற்கை மணமா என்று புலவர் வாயிலாக அறிய அவன் உள்ளம் தூண்டியதாகவும் அதைக் குறித்துத் தெளி

* திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், 16-10.

யப் பாடுவோர் பெறும் பரிசலாக அந்தப் பொற்கிழியை ஏற்படுத்தியதாகவும் கதையைக் கோவைப்படுத்தினார்; 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாட்டோடு சிறந்த கற்பனைத் தொடர்புகள் அமைத்தார்.

புலவருடைய உள்ளத்தில் பாட்டின் பொருளும் பாடிய புலவரின் பெயரும் எழுப்பிய கற்பனையின் வரலாறு இது எனலாம்.

## நக்கீரனார்

தருமி அப் பரிசிலை எளிதில் பெற முடியவில்லை. மதுரையில் இருந்த சங்கப் புலவர்களின் ஒப்புதல் பெற்றால் அன்றிப் பாண்டியன் பரிசில் தருதல் இல்லை. இவை யெல்லாம் தமிழ் வளர்த்த மதுரையை ஒட்டியும் பாண்டியமரபை ஒட்டியும் அமைந்த குறிப்புக்கள் ஆகும்.

மதுரையில் வாழ்ந்த புலவர்களுள் பெரும்புலவர்—பாடல் பல பாடிய புகழ் பெற்ற புலவர்—நக்கீரனார். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றே அவருடைய பெயர் பல இடங்களிலும் குறிக்கப்படுதலால் மதுரை மாநகர்க்கும் அவர்க்கும் இருந்த தொடர்பு வெளிப்படை. நெடுநல்வாடையில் வேப்ப மாலை அணிந்த வேலை,

**வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்***

என அவர் பாடுதலால் பாண்டியனுக்கும் அவருக்கும் இருந்த நட்புப் புலனாகின்றது. நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை ஆக இரண்டு நெடும்பாட்டுக்கள் பத்துப்பாட்டில் அவர் பாடியனவாக உள்ளன.

*நெடுநல்வாடை, 176.

அகநானூற்றில் பதினேழு பாட்டுக்களும்[1], குறுந்தொகையில் எட்டுப் பாட்டுக்களும்[2], நற்றிணையில் ஏழு பாட்டுக்களும்[3], புறநானூற்றில் மூன்று பாட்டுக்களும்[4], அவர் பாடியனவாகக் காணப்படுகின்றன. அப்பாட்டுக்களின் குறிப்பாலும் அவற்றின் கருத்தாலும் அவர் அக்காலத்தில் மதுரையில் செல்வாக்கும் புகழும் மிக்க புலவராக வாழ்ந்திருக்கக்கூடும் என்பது அறியப்படுகிறது. பாண்டியனைப் பற்றியும் மதுரையை (கூடலைப்) பற்றியும் பல குறிப்புக்கள் அவருடைய பாட்டுக்களில் உள்ளன.

இச் சான்றுகளைப் பயன்படுத்திக்கொண்டார் புராணம் எழுதிய புலவர். கொங்குதேர் வாழ்க்கை என்று பாட்டைக் காட்டிப் பாண்டியனுடைய பொற்கிழியைப் பெறும் ஆர்வத்தோடு தருமி வந்தபோது சங்கப்புலவர்களுள் நக்கீரனார் தலைவராய் விளங்கியிருந்ததாகவும் அவர் அதன் கருத்தை ஏற்க மறுத்துவிட்டதாகவும் புராணத்துள் சேர்க்கலானார்.

## இயற்கை மணம் பற்றி ஆராய்ச்சி

பாண்டிமாதேவியின் கூந்தலின் மணம் இயற்கையா செயற்கையா என்னும் ஐயத்தைத் தீர்க்க எழுந்தது இப் பாட்டு என்று எழுதினார்.

[1] அகநானூறு : 36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389.

[2] குறுந்தொகை : 78, 105, 131, 143, 161, 266, 280, 368.

[3] நற்றிணை : 31, 86, 197, 258, 340, 358, 367.

[4] புறநானூறு : 56, 189, 395.

பாட்டில் உள்ளவாறு காணின் இந்த ஐயம் தீர்க்கப்படுவதாகத் தோன்றவில்லை. "வண்டே! இந்த அரிவையின் கூந்தல் போல் நறுமணமான பூக்களை நீ அறிந்தது உண்டோ?" என்று வினவாகவே அமைந்துள்ளது பாட்டு.

வினா மூன்று வகைப்படும். அவை அறியான் வினா, ஐயவினா, அறிபொருள் வினா என்பன.* இங்கு வினவுவோனுக்கு அறியாமையும் இல்லை; ஐயமும் இல்லை எனலாம். ஏன் எனின், இப் பாட்டு வினவாக எழுந்தது அன்று; பாண்டியன் ஐயத்திற்கு விடையாக எழுந்தது இப் பாட்டு என்று கதை கூறுகின்றது. இளம்பூரணர் என்னும் உரையாசிரியரின் கருத்துப்படி இதனை 'மெய்யவற்குக் காட்டல் வினா' எனலாம்.

இதனை அத்தகைய வினவாகக் கொள்ளினும் நங்கையின் கூந்தல் போல் மணமுள்ள பூக்கள் இல்லை என்பதே பாடியவர் கருத்து ஆகின்றது. அதனால் கூந்தலின் மணம் இயற்கை மணம் என்றோ, செயற்கை மணம் என்றோ துணிவதற்கு அக் கருத்துத் துணை புரியவில்லை. எந்தப் பூவிற்கும் இல்லாத புதுமணம் அரிவையின் கூந்தலில் செயற்கையாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம்; அல்லது, இயற்கையாக அமைந்தும் இருக்கலாம். தும்பியும் அறியாத புதுமணம் கூந்தலில் இருப்பதனாலேயே அதனைச் செயற்கைமணம் என்றோ, இயற்கைமணம் என்றோ, துணிவதற்கு இடம் இல்லை. ஐயம் தீர்க்க எழுந்ததாகக் கூறப்படும் பாட்டு அப் பயனை நல்குவதாகத் தோன்றவில்லை.

*தொல்காப்பியம், சொல்லதிகாரம், 13-சேனாவரையம்.

பொற்கிழி அளிக்க முன்வந்த பாண்டியன் இப் பாட்டைக் கேட்டு மகிழ்வதற்கு இடம் இருந்திருக்கிறது. தன் துணைவியின் கூந்தலின் மணம் எந்த மலருக்கும் இல்லாத தனிச்சிறப்பு உடையது என்ற பாராட்டைக் கேட்டு அவன் மகிழ்ந்திருக்க முடியும். ஆனால் இயற்கை மணமா செயற்கை மணமா என்ற அவனுடைய ஐயம் தீர்ந்திருக்க முடியாது.

அரசியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என்ற கருத்து இப் பாட்டில் உள்ளதாக நக்கீரனார் கருதிப் பாட்டைக் குற்றம் கூறினாராம். சிவபெருமான் புலவராய்த் தோன்றிவந்து வாதாடிய போதும் பாண்டிமாதேவியின் கூந்தல்மணம் செயற்கையே என்றும், தாம் வழிபடும் மீனாட்சியம்மையின் கூந்தலின் மணமும் செயற்கையே என்றும் செருக்குடன் கூறினாராம்.

புலவராய் வந்தவர் தாம் சொக்கநாதர் என்பதை அறிவுறுத்துவதற்காகத் தம் நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும் குற்றம் குற்றமே என நக்கீரனார் கூறினாராம்.

கற்றைவார் சடையான் நெற்றிக்
கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான்
உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணு னாலும்
மொழிந்ததும் பாடல் குற்றம்
குற்றமே என்றான் தன்பால்
ஆகிய குற்றம் தேரான்*

என்கிறார் பரஞ்சோதியார்.

* பரஞ்சோதி திருவிளையாடல், 52 - 106.

## குற்றம் எவ்வாறு ?

'கொங்குதேர் வாழ்க்கை' என்ற இப் பாட்டில் அரிவையின் கூந்தல் இயற்கைமணம் உடையது என்ற கருத்து அடங்கியிருப்பதாகக் கூறுவதற்கு ஒரு சிறிது இடம் உள்ளது. "தும்பி! கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே" என்று வினவுகின்ற புலவர், கூந்தலின் மணம் இயற்கையே எனக் கொண்டு வினவுகிறார் எனலாம். ஏன்? தும்பி இயற்கை மணம் உள்ள பூக்களையே நாடுவது. கூந்தல் மணம் இயற்கை மணம் என்றால்தான் தும்பி அதனை மலர்களின் மணங்களோடு ஒப்பிட்டுச் சீர்தூக்க முடியும். ஆதலின் கூந்தலின் மணம் இயற்கைமணமே என்ற அடிப்படையின்மேல் அமைந்தது இப் பாட்டு என்று ஒருவாறு அமைதியும் கூறலாம்.

ஆயினும் ஐயம் தீர்ப்பதற்கு எழுந்த இப் பாட்டு உணர்த்தவேண்டிய கருத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பால் உணர்த்துவது நன்றன்று.

தெளிவு இல்லாமையாகிய இக் குறையை எடுத்துரைத்து நக்கீரனார் குற்றம் கூறவில்லை. இயற்கை மணம் என்ற தெளிவு இருப்பதாகக் குற்றம் கூறி மறுத்தாராம். இதுவே கதை கூறுவது.

## இருவகைக் கற்பனை

சுருங்கக் கூறின், பாட்டு எழுந்த காலத்து அமைந்த கற்பனை ஒருவகையானது; புராணம் எழுந்த காலத்து அமைந்த கற்பனை ஒருவகையானது. இருவகைக் கற்பனைக்கும் வேறுபாடு உள்ளது. முன்னது, உள்ளது புனைந்து கூறியது; பின்னது இல்லது புனைந்து கூறியது.

காதலியின் கூந்தல்மணத்துக்கு நிகர் இல்லை என்ற காதலன் பாராட்டையே தும்பியை நோக்கிய வினாவாக மாற்றி அமைக்கின்றார் புலவர் இறையனார். தலைவன், தலைவி, தும்பி, வினா இவை எல்லாம் புலவரின் கற்பனை. இந்தக் காதல் உணர்வு மட்டும் என்றும் உள்ளது. ஆதலின் இது உள்ளது புனைந்த கற்பனையாகும்.

கதையின்படி, இப்பாட்டு, பாண்டிமாதேவியின் கூந்தலின் மணத்தைக் குறித்து எழுந்த ஆராய்ச்சி யாகின்றது. செய்குன்றில் பாண்டியன் துணைவியோடு இருந்தபோது அவன் உள்ளத்தில் எழுந்த ஐயம், தருமி பொற்கிழியை விரும்பிப் பாட்டைக் கொணர் தல், சங்கப் புலவர்களில் சிறந்த புலவர் நக்கீரனார் பாட்டைக் குற்றங்கூறல் முதலியன யாவும் அந்த ஆராய்ச்சியை ஒட்டி அமைந்த கற்பனைகள் ; இல்லது புனைந்த கற்பனைகள்.

## நக்கீரனார் கற்பனை வல்லவர்

நக்கீரனார் பல அகப்பொருட் பாடல்களைப் பாடி யுள்ளார். அவற்றில் இயற்கையான கற்பனைகள் பல வற்றை அமைத்திருக்கின்றார்.

**ஆடமை புரையும் வனப்பின் பணைத்தோள்**
**பேரமர்க் கண்ணி இருந்த ஊரே**
**நெடுஞ்சேண் ஆரிடை யதுவே ; நெஞ்சே**
**ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து**
**ஓர்ஏர் உழவன் போலப்**
**பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே***

*குறுந்தொகை - 131.

நமக்குஒன்று உரையார் ஆயினும் தமக்குஒன்று
இன்னா இரவின் இன்துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே†

தோளே தொடிநெகிழ்ந் தனவே; நுதலே
பீரிவர் மலரின் பசப்பூர்ந் தன்றே;
கண்ணும் தண்பனி வைகின அன்றே;
தெளிந்தனம் மன்ற தேயரென் உயிர்என
ஆழல் வாழி தோழி நீநின்
தாழ்தொலி கதுப்பின் வீழ்ந்த காலொடு
வண்டுபடு புதுமலர் உண்துறைத் தரீஇய
பெருமட மகளிர் முன்கைச் சிறுகோல்
பொலந்தொடி போல மின்னிக் கணங்கொள்
இன்னிசை முரசின் இரங்கி மன்னர்
எயில்ஊர் பல்தோல் போலச்
செல்மழை தவழும்அவர் நன்மலை நாட்டே*

காதல் மீதூர்ந்த உள்ளத்தில் உள்ளதை உள்ள வாறே உரைத்தல் என்ற வரையறை இல்லை. உணர்ச்சி மிகுதிக்கேற்ப உயர்த்தியும் புனைந்தும் கூறுதலே காதலின் பெற்றி ஆகும்; இதனை நக்கீரனார் நன்குணர்ந்தவர் என்பது அவர் பாடிய பாட்டுக்களாலேயே தெளிவாகின்றது. காதலி ஒருத்தியின் நெற்றி பாரியின் பறம்புமலைச் சுனையில் பூத்த புது மலர் போல் மணம் கமழுவதாக நக்கீரனாரே ஒரு பாட்டில் பாடியுள்ளார்.

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று

*குறுந்தொகை - 266. *நற்றிணை, 197

*செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு*
*தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி*
*யாண்டுபல கழிய வேண்டுவயின் பிழையாது*
*ஆள்இடூஉக் கடந்து வாள்அமர் உழக்கி*
*ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய*
*கடும்பரிப் புரவிக் கைவண் பாரி*
*தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த*
*தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே.**

இத்தகைய கற்பனைவளம் மிக்க பாட்டுக்களை இயற்றிய புலவர் நக்கீரனார், 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாட்டில் இல்லாததைக் குறித்துக் குற்றம் கூறிக் கடிவதற்கு மாறாக, பாட்டில் உள்ள கற்பனைச் சிறப்பை உணர்ந்து போற்றியிருத்தல் கூடும்.

## கற்பனையா ? ஆராய்ச்சியா ?

ஆதலின், 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாட்டிலும், தலைவியின் கூந்தல் போல் மணம் கமழும் பூக்கள் எங்கேனும் உண்டோ என்று தும்பியை நோக்கி வினவும் வினாவில், தலைவனுடைய உணர்ச்சி மிக்க உள்ளம் புலப்படுவதாகக் கூறலாம்.

ஆயின், தருமியின் கதையோடு இப் பாட்டைத் தொடர்பு படுத்திய புலவர், இதில் அத்தகைய உணர்ச்சி இருப்பதாகக் கொள்ளவில்லை. ஐயப்பாட்டிற்கு இடமான ஒரு கருத்தை ஆராய்ந்து உண்மை இது எனத் தெளிய உணர்த்துவதே இப் பாட்டின் பயன் எனக் கொண்டார். இமயத்தின் உயரம் இவ்வளவா அவ்வளவா என்று ஆராய்ந்து இவ்வளவுதான்

*அகநானூறு - 78.

எனத் தெளிந்து அறுதியிட்டு உரைக்கும் ஆராய்ச்சியாளரின் முடிவு போல் பாட்டு அமைந்துள்ளது எனக் கொண்டார். அதனால்தான் தருமியின் கதையோடு இப்பாட்டை எளிதில் இயைபு படுத்தினர்.

## அகமா ? புறமா ?

குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் இத்தனையும் அறியார். அறிந்திருப்பின் இப் பாட்டை அகப்பொருள்பாடல்களுள் ஒன்றாகச் சேர்த்திருக்க மாட்டார். எல்லார்க்கும் பொதுவான - காதலர் பெயர் முதலியன குறிப்பிடப்படாத - காதல் வாழ்வு பற்றிய பாட்டுக்களே அகப்பொருள் தொகைநூல்களில் இடம் பெறுவன. பாண்டிமாதேவியின் கூந்தல் மணம் குறித்த ஆராய்ச்சிமுடிபு பற்றிய பாட்டாய்ப் பழங்காலத்தில் விளங்கியிருக்குமேயானால், குறுந்தொகை தொகுத்த அறிஞர் இதனைத் தனிச் சிறப்புடையதாக விட்டிருப்பாரே அன்றி மற்ற அகப் பாட்டுக்களோடு ஒன்றாகச் சேர்த்திருக்க மாட்டார். பாட்டினுள் பாண்டிமாதேவியின் பெயரோ, பாண்டிய மரபைக் குறித்த தொடரோ இல்லாமற் போயினும் பொற்கிழியைப் பற்றிய வரலாறு வழக்கில் இருந்திருப்பினும் அது ஒன்றே அக்பாட்டுக்களோடு சேர்க்காமல் விடுதற்குரிய காரணமாக அமைந்திருக்கும். தொகுத்த புலவரின் காலத்தில் இக் கதை இல்லாதிருந்தமையால்தான் இப் பாட்டுப் புறநானூற்றில் இடம் பெறாமல் குறுந்தொகையுள் இடம் பெற்றது.

நெடுநல்வாடை என்னும் நக்கீரனாரின் பாட்டுள் அகப்பொருளே முதலில் அமைந்திருந்தும் பாசறையில் உள்ள தலைவனுடைய வேலில் வேம்பு சுற்றப்பட்

டிருந்த காரணத்தால் வேப்பந் தார் அணியும் பாண்டிய ஜனக் குறிப்பதாகக் கொண்டு அது அகப்பாட்டு அன்று என விலக்கப்பட்டது; பத்துப்பாட்டினுள் புறப்பொருள் பற்றிய பாட்டுக்களுள் ஒன்ருக விளங்கு கிறது. அது போலவே கொங்குதேர் வாழ்க்கை என்ற இப் பாட்டோடு பொற்கிழி பற்றிய செய்தியும் இயைந்து நாட்டில் வழங்கியிருந்தால், இது குறுந் தொகையில் இடம் பெருமல் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கும்.

## இலக்கிய மரபு

பழங்காலத்தில் இப்படித் தான் பாட வேண்டும் என்ற வரையறை இருந்துவந்தது. அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் வாழும் காதல் வாழ்வு பற்றி யாவது, நாட்டுத் தலைவனுடைய வாழ்வில் அல்லது குடிமக்களின் வாழ்வில் விளங்கிய வீரம் கொடை முதலியன பற்றியாவது பாட்டுப் பாடலாம் என்ற வரையறை இருந்தது. இந்த இருவகைப்பொருளேயே அகப்பொருள் என்றும், புறப்பொருள் என்றும் முன் ஞேர் பாகுபாடு செய்திருந்தனர். இவற்றைப் பாடும் போதும், இன்ன பகுதியைப் பாடும் பாட்டில் இன்ன நிலமும் காலமும் இன்னின்ன விலங்கு பறவை முதலி யனவும் அமையலாம் என்றும் வகுத்திருந்தனர். இவ் வாறு வகுத்திருந்த விதிகள் பலவும் இயற்கையோடு இயைந்தனவாகவே இருந்தன. எனினும், அவை பாடு வோர்க்கு எல்லே வகுத்துக்கொடுத்தாற்போல் அமைந் திருந்தன.

காதலன் ஒருவன் தன் காதலியைப் பாராட்டுவதா கப் பாட்டு ஒன்று பாடவேண்டுமானுல் அது குறிஞ்சி

நிலத்தில் தினைப்புனத்திற்கு அருகே மலர்களில் தேனை நாடும் வண்டுகளும் தோகை விரித்து ஆடும் மயில்களும் கொஞ்சிக் குலாவும் அழகிய கிளிகளும் சூழ்ந்த சூழலைப் பாடுவதாக அமைய வேண்டும். மழை தூறும் ஐப்பசி கார்த்திகைத் திங்கள்களாகிய கால நிலையும் அதில் அமைய வேண்டும். காதலனும் காதலியு மாகிய இருவரும் மலையில் வாழும் மக்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறே சிறுபொழுது முதலிய வேறு வரையறைகளும் சில உள்ளன. இத்தனையும் அமை யப் பாடுதலே பழங்காலத்து மரபாக இருந்தது.

அந்த மரபினால் பாட்டுக்கு வேண்டாத கட்டுப் பாடு அமைந்துவிட்டது. ஆயினும், அதனால் சில நன்மைகளும் விளைந்தன. மனம் போன போக்கில் காதல்துறையைப் பாடும் வழு நேராமல் மரபு காவல் புரிந்தது. வெறுங் காமக்களியாட்டமும் உடல்வருணனை யும் பற்றிய பாட்டுக்கள் தோன்ற இடம் இல்லாமற் போயிற்று. உயர்ந்த அன்பு பற்றிய உள்ளத்து உறவை மிகுதியாக எடுத்துக்கூறும் பாட்டுக்கள் பல தோன்றி இலக்கியத்தின் பெருமையைக் காக்க முடிந்தது. இத் தகைய நன்மைகள் விளைந்தமையால் அந்தக் கட்டுப் பாடு வழிவழியாகப் போற்றப்படலாயிற்று ; இலக்கண நூல்கள் பலவும் அதற்கு அரண் செய்வன ஆயின.

## அகப்பொருள்

காதலன் ஒருவன் தன் காதலியின் சிறப்பைப் பாராட்டுவதாக அமைந்துள்ள அத்தகைய பழம் பாட்டுக்களில் ‘ கொங்குதேர் வாழ்க்கை ’ என்ற இந்தப் பாட்டும் ஒன்றாகும்.

காதலர் இருவர்க்கிடையே சில நாட்களாகக் காதல் தொடங்கி வளர்ந்துவருகிறது. காதலியின் உள்ளத்தைக் கவர்ந்தவன் காதலன். அவன் தன் உள்ளத்தின் அன்பு தோன்றுமாறு அவளைப் பாராட்டுகிறான்; அவளுடைய விழுமிய பண்புகளில் நெஞ்சைப் பறிகொடுத்துவிடுகிறான்; அவளுடைய மென்மையையும் அழகையும் உள்ளத்தே நினைந்து மகிழ்கிறான். கருநிறக் கூந்தலை நினைக்கும்போது, அதன் அழகு மட்டும் அல்லாமல், நறுமணமும் அவனுக்கு வியப்பை விளைக்கின்றது. அந் நிலையில் கூந்தலின் நறுமணத்தைப் பாராட்டுவதாக அமைந்துள்ள பாட்டு இது.

பழகுவதற்கு ஏற்ற இனிய பண்புகள் அவளிடம் நிறைந்துள்ளன. அதனால் மீண்டும் மீண்டும் பழக வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து உறவு வளர்கிறது என்கிறான் காதலன். அந்த உறவை 'நட்பு' என்றே பாராட்டுகிறான். பற்கள் முத்துப் போல் அழகாகச் செறிந்து அமைந்த அழகும் அவன் உள்ளத்திற்கு விருந்தாகிறது. உள்ளத்தின் உயர்ந்த பண்புகளைப் பாராட்டுவதோடு, இவ்வாறு உடலின் அழகினையும் பாராட்டி மகிழ்கிறான். இத்தகைய மகிழ்ச்சியோடு தான் கூந்தலின் நறுமணத்தைப் பற்றி எண்ணி வியப்புறுகிறான்.

இவ்வாறு வியந்து நிற்கும் அவனுடைய கண்ணின் எதிரே, பூத்துக் குலுங்கும் ஒரு கொடியில் தும்பி ஒன்று இன்னிசை பாடிப் பறக்கின்றது. மலர்களின் நறுமணம் நாடித் திரிவதே வாழ்க்கையாகக் கொண்ட அந்தத் தும்பிக்கு மணத்தின் அருமை பெருமைகள் நன்றாகத் தெரியும் என்று எண்ணுகிறான் காதலன். மலையெல்லாம் பறந்து திரிந்து மரங்

களிலும் செடி கொடிகளிலும் சுனைகளிலும் உள்ள பலவகை மலர்களையும் முகர்ந்து நிறைந்த அனுபவ அறிவு பெற்று வாழ்வது அந்தத் தும்பி. அதற்குத் தெரியாத புதிய மலரோ புதிய மணமோ இருக்க முடியாது. இத்தகைய எண்ணங்களுக்கு இடம் கொடுத்துக் காதலன் நிற்கும்போது, அந்தத் தும்பி மெல்லப் பறந்து காதலியின் கூந்தலின் அருகே வருகிறது.

அப்போது காதலன் அந்தத் தும்பியை நோக்கிப் பின்வருமாறு கேட்கிருன்: "தும்பி! பூந் துகளை நாடி ஆராய்வதே வாழ்க்கையாகக் கொண்டிருக்கிருய் நீ. ஒன்று கேட்கிறேன். உன் மனத்தில் நீ விரும்புவது எதுவோ அதைச் சொல்லாமல், நீ உண்மையாகக் கண்டதைச் சொல். பழகுதல் பொருந்திய நட்பு உடையவள் – மயில் போன்ற சாயல் உடையவள் – செறிந்தமைந்த பற்களை உடையவளாகிய இந்த நங்கையின் கூந்தல் போல் நறுமணம் உள்ள பூக்கள் உள்ளனவோ? நீ அறியும் பூக்களில் எவையேனும் இத்தகைய மணம் உடையவை உண்டோ?" என்கிருன்.

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறிஎயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீ அறியும் பூவே.***

*கொங்கு - மலர்த்துகள், தாது. அஞ்சிறை - அழகிய சிறகு, உள்ளடங்கும் சிறகு. காமம் - விருப்பம், விருப்பமான கருத்து. கண்டது - உண்மையாகக் கண்டது. மொழிமோ - மொழிக. பயிலியது - பழகுதல். கெழீஇய - பொருந்திய. எயிறு - பல். அரிவை - பெண். நறிய - நறுமணமுள்ளவை.

## இறையனுர்

இந்தப் பாட்டைப் பாடிய புலவர் இறையனுரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றும் அறியக் கிடைக்கவில்லை.

சிறிது பிற்காலத்தே, களவியல் என்று அகப் பொருள் இலக்கணம் பற்றிய நூல் ஒன்று இறை யனுர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. அந்த இறையனுர் என்பவரும் 'கொங்குதேர் வாழ்க்கை' பாடிய இறையனுரும் ஒருவரோ என்று தெளிவதற்கு உரிய சான்றுகளும் இல்லை.

இந்தப் பழம்பாட்டு, மற்ற எத்தனையோ பழம் பாட்டுக்களைப் போல் எந்த ஊரிலோ ஒரு மூலையில் கிடந்தது. புரவலர் சிலருடைய தூண்டுதலாலும் உதவியாலும், பழம்பாட்டுக்களைத் தொகுத்து நூலாக் கும் முயற்சி நடைபெற்ற காலத்தில் இந்தப் பாட்டும் பூரிக்கோ என்பவரின் கையில் கிடைத்தது. அவர் இதையும் இதுபோன்ற சிறு பாட்டுக்களையும் சேர்த்து ஒரு தொகைநூல் அமைத்தார்.

இவ்வாறு பாட்டுக்களைத் தொகுத்துத் தொகை நூல் ஆக்கிய முயற்சி எல்லாம் கி. பி. மூன்று நான் காம் நூற்றுண்டுகளின் அளவில் நிறைவேறியிருக்கும் என்று கொள்ளலாம்.

## கிளவிக் குறிப்பு

பாட்டுக்களைத் தொகுத்தவரோ, அல்லது வேறு புலவர் ஒருவரோ, அந்தப் பாட்டுக்களின் கருத்துக்க ளாகச் சிறு குறிப்புக்களை அவற்றின் அடியில் எழுதிச் சேர்த்துள்ளார். அந்தக் குறிப்புக்களை எழுதியவர் யார் என்று அறிவிக்கும் சான்றும் இல்லை. எனினும்,

அவை இலக்கியப் பயிற்சியும் நுண்ணுணர்வும் உடைய சிறந்த புலவர் ஒருவராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது மட்டும் தெளிவாகிறது. அத்தகைய புலமை நுட்பமும் திட்பமும் அந்தச் சிறு குறிப்புக்களில் புலனுகின்றன.

கொங்குதேர் வாழ்க்கை என்ற பாட்டின்கீழ்க் காணப்படும் பழைய குறிப்பு:

இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன் தலைமகளைக் காணின் நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் **தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது.**

இந்தக் குறிப்பை எழுதிய பழம்புலவரும் பொற்கிழியின் கதை அறியாதவரே. அறிந்திருப்பின், "தலைவியின் கூந்தல் இயற்கை மணம் என்று பாராட்டியது" என்று குறித்திருக்கக் கூடும். அவர் அவ்வாறு குறிக்காமல் '**தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது**' என்று குறித்திருக்கின்றார். இக் குறிப்பின்படி இப் பாட்டு, தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டியதாகிவிடுகிறது. பொற்கிழி பற்றிய கதையின்படி தலைவியின் நலத்தைத் தலைவன் உளம் மகிழ மற்ருெருவர் பாராட்டியதாகிறது. குறிப்பு முந்தியது; கதை பிந்தியது. குறிப்பு முரண்பாடு இல்லாதது; கதை முரண்பாடு உள்ளது. ஆகவே குறிப்பே போற்றுதற்கு உரியதாகும்.

## காதலன் பாராட்டு

பாட்டின் இடையே தலைவியைக் குறித்து மூன்று தொடர்கள் அடையாக உள்ளன. ஒன்று, 'பயிலியது கெழீஇய நட்பின்' என்பது. மற்றைய இரண்டு

'மயிலியல்,' 'செறி எயிற்று' என்பன. பிந்திய இரண்டும் தலைவியைக் குறித்து ஏனையோரும் கூறத் தகுந்தவை. முந்திய ஒன்று, காதல் கொண்ட தலைவன் மட்டுமே கூறத் தகுந்ததாகும். ஆதலின் காதலன் ஒருவன் தன் காதலியைப் பாராட்டிக் கூறியதாகவே பாட்டு அமைந்துள்ளது எனலாம்.

பாட்டு - உயர்ந்த கற்பனை நயமுள்ள பாட்டு ஆகையால் பிற்காலத்து உரையாசிரியர்களின் உள்ளங்களையும் கவர்ந்தது. எனினும் அவர்களும் பொற்கிழி பற்றிய செய்தியைப் போற்றியதாகத் தெரியவில்லை.

## உரையாசிரியர் கருத்து

"கொங்குதேர் வாழ்க்கை என்பதும் இளவேனிலாயிற்று, தும்பி கொங்கு தேரும் காலம் அதுவாகலின்"* என்றும், "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ என்றது என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறுதே சொல் என்றலின் குறிஞ்சி நிலம் என்றாயிற்று"† என்றும், "கொங்குதேர் வாழ்க்கை... இதனுள் தும்பி என்றது முன்னிலை யாக்கல்; கண்டது மொழிமோ என்றது சொல்வழிப்படுத்தல்; கூந்தலின் நறியவும் உளவோ என்றது நன்னய முரைத்தல்; காமம் செப்பாது என்றது என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாது மெய்கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடம் அணித்து என்றது; பயிலியது நட்பு என்றது தந்நிலை உரைத்தல்"‡ என்றும், "கொங்குதேர் வாழ்க்கை...என்பது உவகை பற்றிக் கூறியது"§ என்றும், நச்சினார்க்கினியர் தொல்காப்பிய

*தொல் - பொருள் 16.
† ஷை. 93.
‡தொல் - பொருள் 101.
§ ஷை. 196.

உரையில் நான்கு இடங்களில் இப் பாட்டை எடுத்துக் காட்டித் தம் கருத்தை விளக்கியுள்ளார். அங்கெல் லாம் இதனை அகப்பொருள்பாட்டாகவே கொண்டு, காதலனுடைய பாராட்டாகவே எடுத்துரைத்துள்ளார்.

"கொங்குதேர் வாழ்க்கை...என்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள்"|| என்று பேராசிரியரும் தம் உரையில் இவ்வாறே குறித் துள்ளார்.

இறையனார் அகப்பொருள் என்னும் நூலின் உரையாசிரியர், "தன் கண் நின்ற அன்பு வெளிப் படுத்துத் தலைமகளைப்புகழ்ந்து நயப்பு உணர்த் திற்று"* என்று குறித்து இப் பாட்டை மேற்கோள் காட்டியுள்ளார். மற்ற உரையாசிரியர் சிலரும் இதனை மேற்கோள் காட்டி இவ்வாறே எடுத்துரைத்துள்ள னர். அவர்களுள் ஒருவரும் இதனைப் பொற்கிழிக்கு உரிய பாட்டாகக் கதையோடு தொடர்பு படுத்தவில்லை.

## கற்பனை

தும்பி பேசாது; நாம் சொல்வதைக் கேளாது. ஆயினும், கற்பனையுலகில் அது பேசும், பேச்சைக் கேட்கும். உணர்ச்சி மிக்க காதலன் தும்பியை நோக்கிப் பேசுவதற்குக் காரணம் அஃதுவே.

இத்தகைய கற்பனைப்பாட்டுக்கள் பல இருத்தலைக் கண்ட தொல்காப்பியனார், காதலின் இன்பமும் துன்ப

|| தொல் - பொருள் 498.
* களவியல் - 2.

மும் விளங்க, மெய்ப்பாடும் தோன்ற, சொல்கின்ற வரின் உறுப்பெல்லாம் உடையது போலவும் உணர்வு உடையது போலவும் மறுமொழி தருவது போலவும் தம் நெஞ்சையே நோக்கிக் கூறுவதாகப் பாடுவது உண்டு என்கிறார். வாய்திறந்து பேசாதனவாகிய பறவை முதலியவற்றோடு பேச்சு அமைத்து, அவை செய்யாத தொழில்களைச் செய்வதாகக் கூறிப் பாடுத லும் உண்டு என்கிறார்.

**நோயும் இன்பமும் இருவகை நிலையின்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்...***

கொங்குதேர் வாழ்க்கை என்னும் இப் பாட்டு, காதலின் இன்பப் பகுதி பற்றியது ; உவகை என்னும் மெய்ப்பாடு அமைந்தது ; சொல்லா மரபு உடைய வண்டோடு பேச்சு அமைத்து, காதலன் தன் பாராட் டைத் தெரிவிப்பது.

## கொங்கு தேர்தல்

மலர்களின் நறுமணத்தைப் பல பறவைகளும் நுகர்கின்றன ; விலங்குகளும் நுகர்கின்றன ; மக்க ளாகிய நாமும் நுகர்கின்றோம். முகர்ந்து நுகர்வதற்கு உரியது மணம். முகர்வதற்கு உரிய புலன் பறவை களுக்கும் உண்டு ; விலங்குகளுக்கும் உண்டு ; மக்க

*தொல் - பொருள் - 196.

ளுக்கும் உண்டு; ஆனால் முகரும் புலன் சிறந்து விளங்குவது தும்பிகளுக்கே (வண்டுகளுக்கே) ஆகும்.

ஒவ்வொரு புலனும் ஒவ்வோர் உயிரினத்துக்கு மிகச் சிறப்பாக வளர்ந்து அமைந்திருக்கிறது. பூனை முதலியவற்றிற்குக் கட்புலன் சிறப்பாக உள்ளது. வேறு சில உயிர்களுக்குச் செவிப்புலன் நுட்பமாக வளர்ந்து நுண்ணிய ஒலி வேறுபாடுகளை எல்லாம் அறிய உதவுகிறது.

எறும்பு, நாய் முதலியவற்றிற்கு முகர்வுப் புலன் மிக நுட்பமாய் வளர்ந்தமைந்துள்ளது. ஆயினும் அவைகள் மலர்மணங்களை நாடாமல் வேறு பல நாற்றங்களை நாடி வாழ்கின்றன. தும்பிதான் பலவகை மலர்களின் மணங்களைத் தேர்ந்தறியும் ஆற்றலும் அதற்கு ஏற்ற நுண்ணிய புலனும் வாய்ந்ததாக உள்ளது.

மணங்களில் மிகத் தூய்மையானது, உயர்ந்தது, இயற்கையானது, மலர் மணமே. மக்கள் உள்ளத்தைக் கவர்வதும் மலர்மணமே. அத்தகைய உயர்ந்த மணத்தை ஆராயும் பேறு பெற்றது தும்பி.

## கலைமணம்

கலைகள் பல. அவற்றுள் விரும்பத்தக்கன சில; விரும்பத்தகாதன சில. வாழ்க்கைக்கு வேண்டுவன சில; வேண்டாதன சில. உணர்வின் நுட்பத்தைப் புலப்படுத்தும் நுண்கலைகள் சில; மக்கள் இனம் அறிவு கொண்டு வளர்த்துக் குவித்த மற்றக் கலைகள் பல. அவற்றுள் மணிகளும் உண்டு; குப்பைகளும் உண்டு.

மக்களில் சிற்சில வகையார் சிற்சில கலைகளைப் போற்றிக்கொண்டு காலம் கழிக்கின்றனர். நின்று பயன் தரும் நுண்கலைகளைப் போற்றி உணரும் மக்கள்

சிறுபான்மையோரே. ஓவியம், சிற்பம், நாடகம், இசை, இலக்கியம் முதலியன அத்தகைய நுண்கலைகள் ஆகும். இவற்றுள்ளும் சிறந்தவை இசையும் இலக்கியமும் ஆகும்.

இசைக்கும் இல்லாத தனிச்சிறப்பு ஒருவகையில் இலக்கியத்திற்கு உண்டு. இசை நுண்ணிய உணர்ச்சிகளை மட்டும் புலப்படுத்த, இலக்கியம் உணர்ச்சிகளைப் புலப்படுத்துவதோடு அறிவுக்கும் விருந்தாய் அமைகிறது. அதனால்தான் பாடுந்தோறும் கேட்குந்தோறும் இனிமை பயக்கும் இசை போல் அல்லாமல் நினைக்குந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் இன்பம் பயக்கும் தனிச் சிறப்பு இலக்கியத்திற்கு உள்ளது. உள்ளக் களிக்கும் பெருஞ்சிறப்பு இலக்கியத்திற்கு அமைந்திருத்தலால்தான் அது பல நூற்றாண்டுகளைக் கடந்தும் அழியாமல் வாழ வல்லதாய் விளங்குகின்றது. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழருடைய ஓவியம் எங்கே? சிற்பம் எங்கே? நாடகம் எங்கே? இசையும் எங்கே? பல மறைந்து போயின; சில திரிந்து நிற்கின்றன. பழந்தமிழ் இலக்கியம் ஒன்றுதான் இன்றுவரையில் நாம் பெற்று மகிழும் பெருங் கலைச் செல்வமாய்த் திகழ்கிறது. தலைமுறை தலைமுறையாக மக்கள் நினைந்து நினைந்து மகிழ்ந்து போற்றிக் காத்து வருதற்குரிய கலைச் செல்வமாக உள்ளது இலக்கியம்.

இத்தகைய இலக்கிய மணத்தைத் தேர்ந்தறியும் பேறு பெற்ற தும்பிகளே புலவர்கள். மற்ற மக்கள் பணத்தையும் பதவியையும் உணவையும் உடையையும் இதையும் அதையும் தேர்ந்தறிய வல்லவர்களாக விளங்க இந்தப் புலவர் பெருமக்கள் மட்டுமே இலக்கிய

மலர்களை நாடிக் கொங்கு தேர்ந்தறியும் பேறு பெற்றவர்களாக விளங்குகின்றார்கள்.

## வாழ்க்கை

மலர்களை முகர்ந்து பார்க்கும் வாய்ப்பு, சில எறும்புகளுக்கும் கிடைக்கின்றது. புல்லை மேயும் மாடுகள் சில வேளைகளில் மலர்க்கொடிகளுக்கும் செடிகளுக்கும் அருகில் தலையை உயர்த்தி நீட்டும் போது அந்த மலர்களின் மணம் அவற்றிற்கு எட்டலாம். தழை தின்னும் மாடுகள் புதர்களில் பூத்த மலர்களை முகர்ந்தவாறே தழைகளைக் கடித்துச் செல்லலாம். புதர்களில் பதுங்கிக் கிடக்கும் பாம்புகளும் அங்குப் பூத்துக் கிடக்கும் மலர்களை முகரும் வாய்ப்புப் பெறலாம். மரம் செடிகொடிகளில் உள்ள புழுக்களையும் பழங்களையும் காய்களையும் கொத்தித் தின்ன வரும் பறவைகள் அவற்றின் இடையிடையே உள்ள மலர்களின் மணத்தையும் நுகரலாம். இவ்வாறு மலர் மணம் நுகரும் வாய்ப்பு இந்த உயிரினங்களுக்குப் பொழுதுபோக்காக உள்ளதே அன்றி வாழ்க்கையாக அமையவில்லை. உயர்ந்த பிறவி எடுத்துள்ள மனிதரும் மலர்மணத்தை இன்பப் பொழுதுபோக்காக நுகர்கின்றனரே அல்லாமல் அதுவே வாழ்க்கையாகக் கொள்ளவில்லை. பூ விற்றல், மாலை தொடுத்தல் முதலியவற்றைத் தொழிலாக உடைய மக்கள் சிலர் மட்டுமே அந்தப் பேறு பெற்றிருக்கிறார்கள்; அவர்களும் உள்ளம் ஒன்றி மலர்மணம் நுகர்வதாகக் கூறுவதற்கில்லை; அவர்களின் உள்ளம், மலர்களை விற்றுச் சேரும் பணத்தை நுகர்வதையே பெரும்பாலும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆயின், தும்பிகளுக்கு வாய்த்த வாழ்க்கை தனிச் சிறப்புடையது. கொங்கு தேர்தலைத் தும்பி பொழுது போக்காகக் கொள்ளவில்லை; அதையே வாழ்க்கை யாகக் கொண்டுள்ளது. கொங்கு முகர்ந்தவாறே உள்ளத்தால் வேறு எதையும் நாடுவதில்லை. அதன் உள்ளம் ஒன்றிய வாழ்க்கை கொங்குதேர் வாழ்க்கை.

## புலவர் வாழ்வு

இலக்கிய இன்பத்தைப் பலரும் நுகர்கின்றார்கள். எந்தெந்தத் துறையிலோ வாழ்க்கையை நடத்திக் கொண்டே பொழுதுபோக்காக இலக்கியத்தை நாடு கின்றார்கள். ஒரு சில வேளைகளில் இலக்கியத்தின் பக்கமாகத் தலையை நீட்டுகின்றார்கள் என்று கூற லாம்; அவர்களின்மேல் குற்றம் இல்லை; அவர்கள் வாழ்க்கை அப்படி அமைந்தது. அவர்களைப் போல் அல்லாமல் இலக்கியத் தொண்டையே தொழிலாகக் கொண்டவர்கள் சிலர் அவர்களிலும் வயிற்றுப்பிழைப் புக்காக அதைச் செய்துவிட்டு உள்ளத்தால் வேறொன் றை எண்ணி ஏங்குவோரும் உள்ளனர். அவர்களைப் போல் அல்லாமல் இலக்கியத் துறையையே உள்ளம் உவந்த தொழிலாகவும் தொண்டாகவும் ஏற்று மகிழ் கின்றவர்கள் ஒருசிலர்; அவர்களே இலக்கியத் தும்பி கள்; கலை உலகத்தில் கொங்குதேர் வாழ்க்கை உடை யவர்கள்.

## அஞ்சிறை

தும்பியின் சிறகுகள் அழகானவை; உள்ளடங்கி இருப்பவை (அம்+சிறை, அகம்+சிறை). அச் சிறகு களிலே பலவகை நிறங்கள் ஒளி வீசுகின்றன. சிறிய சிறகுகளுக்குள்ளே அழகிய ஒளிகள் அமைந்திருத்தல்

இயற்கையின் விந்தையாகும். நத்தையும் நண்டும் போல மண்ணோடு மண்ணாய் வாழாமல் வானத்து ஒளி நோக்கி எழும் மலர் போலவே மண்ணை விட்டு உயர எழுந்து பறந்து திரியும் தும்பியின் வாழ்வுக்குத் துணை செய்வன இந்த அழகிய சிறு சிறகுகளே. 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற உயர் நோக்கு, தும்பிக்கு இயல்பாக அமைந்திருக்கின்றது. இத்தகைய உயர்நோக்குக் கொண்டு மண்ணில் படிந்திராமல் மலர்க்கொடிகளிலும் செடிகளிலும் மரங்களிலும் பறந்து எழும் வாழ்வுக்கு உரியவாறு அழகிய சிறகுகள் அமைந்திருப்பது பொருத்தமே ஆகும்.

## கற்பனைச் சிறகு

தும்பிக்குச் சிறகுகள் எவ்வாறோ அவ்வாறே புலவர்க்குக் கற்பனை அமைந்திருக்கிறது. சிறகுகள் என்றவுடனே கற்பனை, அல்லது பாட்டு, அல்லது கலைஞரின் வாழ்க்கை நினைவுக்கு வருதல் இயல்பு.

பறவைகள், புறத்தே சிறகுகள் பெற்று வாழ்கின்றன ; கலைஞர், அகத்தே கற்பனை என்னும் சிறகுகள் கொண்டு பறந்து வாழ்கின்றனர். பறவைகள் வான வெளியை அளக்கின்றன ; கலைஞரோ எங்கும் எதையும் அளந்து உணர்கின்றனர். மற்ற உயிர்களின் உள்ளமெல்லாம் பறந்து திரிந்து அவைகள் உணர்வன எல்லாவற்றையும் அளக்கும் ஆற்றல் உடையவை கற்பனைச் சிறகுகள்.

எவ்வாறோ, கலைஞரின் வாழ்க்கை பறவைகளின் வாழ்க்கையை நினைவூட்டுவதாக உள்ளது.

பரிசில் தரும் வள்ளலைத் தேடிச் செல்லும் புலவரின் வாழ்க்கையைப் பழுமரம் தேடிச் செல்லும் பறவை

களின் வாழ்க்கையோடு ஒப்பிடுகின்றனர் கோவூர் கிழார் முதலிய புலவர் சிலர்.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை*

பழுமரம் உள்ளிய பறவையின் யானும்அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கு...†

பழுமரம் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண‡

நீயிரும்,
கனிபொழி கானம் கிளையொடு உணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினம் மான...
உள்ளினிர் சேறிர் ஆயின்§

என்னும் பத்துப்பாட்டின் அடிகளும் இதனை விளக்குகின்றன.

## மனத்தின் வளர்ச்சி

மனிதன் நத்தையும் நண்டும் போல, ஆடும் மாடும் போல, மண்ணிலே பிறந்து மண்ணிலே வாழ்கின்

*புறநானூறு, 47. ‡பெரும்பாணாற்றுப்படை, 20 - 22.
†பொருநராற்றுப்படை, 64 - 7. §மலைபடுகடாம், 53 - 65.

றவனே ஆயினும் அவன் மனம் பறவை போல் உயர உயரப் பறந்து வானத்தில் தவழும் இயல்பினது. இவ்வாறு பறக்கும் இயல்புடைய மனத்திற்கு அமைந்த சிறகுதான் கற்பனை என்பது.

மனம் கனவிலும் பறந்து திரிகின்றது; நனவிலும் பறந்து திரிகின்றது. கனவில் பறந்து திரியும்போது நம் விருப்பம் போல் பறக்க முடிவதில்லை. கள் உண்டவன் தன்வயம் இழந்து கள்ளின் மயக்கத்திற் கேற்ப இயங்குவதுபோல், கனவும் உறங்கும் நிலையில் அறிவின் மயக்கத்திற்கேற்ப நம் வயம் அன்றி நடைபெறுகின்றது. ஆதலின் நனவில் பறந்து திரியும் மனமே பெருமைக்கு உரியது.

நனவில் பறக்கும் மனத்தின் ஆற்றல் அதன் கற்பனைத்திறனுக்கு ஏற்றவாறு அமையும். உயர்ந்த கற்பனைகளிலே பழகியவரின் மனம் உயர்ந்த எல்லைகளில் பறக்கவல்லதாம்; இழிந்த கற்பனைகளில் பழகியவரின் மனம் தாழ்ந்த எண்ணங்களிலே சுழலும். பேராசையும் பொறாமையும் பகைமையும் கொண்ட ஒருவன் தன் ஆக்கத்தையும் பிறன் அழிவையும் பற்றிக் கற்பனைகள் செய்து குறுகிய எல்லைகளில் வாழ்நாளைக் கழிப்பான். உலகமெல்லாம் இன்புற்று வாழ எண்ணிடும் ஒருவன் மனம் தன்னை மறந்து மிக உயர்ந்த எல்லைகளை எய்தி வண்மையும் வறுமையும் இல்லாத — இல்லோரும் உடையோரும் இல்லாத — இனிய உலகைப் படைத்து உயர்ந்த கற்பனையில் வாழும். பண்படாத மனம் ஊர்வம்பிலும் துன்பிலும் நெளிய, இலக்கியத்தில் பண்பட்ட மனம், கண்ணகியின் தவத்திலும், மாதவியின் கலையிலும், மணிமேகலையின் அறத்திலும், பாரியின் வண்மையிலும்,

கபிலர் முதலானோரின் கற்பனையிலும், மண்ணும் விண்ணும் காட்டும் காவிய எழிலோவியங்களிலும், எண்ணற்ற உயிரினங்களின் இயற்கை வாழ்வான நாடகங்களிலும் திளைத்துத் தன்னை மறக்கும். இத்தகைய அழகிய கற்பனைச்சிறகு வாய்ந்த புலவர்கள் தாம் இன்புறுவது உலகு இன்புற விழைகின்ற நெஞ்சத்தினர்; தாம் பெற்ற கற்பனை இன்பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்ற ஆர்வத்தினர். தாம் முயன்று எய்திய கற்பனை உலகத்தைப் பிறரும் எய்த வேண்டும் என்ற வேட்கையால் காவிய ஏணிகள் அமைத்துத் தரும் கருணையாளர். உண்மையாகவே காவியங்கள் உயரப் பறக்கும் மனம் இல்லாதவர்க்குக் கைகொடுத்து உயர இழுத்துச் செல்லும் கருவிகள். அவற்றின் வாயிலாகக் கற்பனை உலகங்கட்குச் சென்று ஒரு முறை இருமுறை மும்முறை பழகிவிட்ட பிறகு அழகிய ஒளி வீசும் கற்பனைச்சிறகுகள் தாமே முளைத்துவிடுகின்றன. இவ்வாறு சிறகற்ற பூச்சிகளை சிறகுடைய பறவைகளாக மாற்றி அமைக்கும் திறன் பெற்றவை காவியங்கள். இத்துணைச் சிறப்பு அமைந்த காவியங்களைப் படைத்து உயர்ந்த உலகில் பறந்து உயர்ந்த வாழ்வு வாழுமாறு தூண்டுகின்றவர்களே புலமைத் தும்பிகள்.

## தும்பி

நற்றிணையில் ஒரு தும்பியின் மிக உயர்ந்த தொண்டு – அந்த விழுமிய தொண்டின் பயன் கூறப்பட்டிருக்கின்றது. அந்தத் தும்பி தெளிந்த நறுநீர்ப் பொய்கையில் பூத்த அழகிய தாமரைப்பூக்களின் தாது ஊதி அதன் தூய தேனை உறிஞ்சி, உயர்ந்த மலையின் உச்சிக்குப் பறக்கின்றது. அந்த மலையின் உச்சியிலே

ஓங்கி வளர்ந்த சந்தன மரம் ஒன்றை நாடுகின்றது. தான் உறிஞ்சிக்கொணர்ந்த இனிய தாமரைத்தேனை அங்கே சேர்த்துக் கூடுகட்டிவைக்கின்றது. பூக்களிலே சிறந்த பூ, மலையிலே உயர்ந்த இடம், மரங்களிலே மாண்புடைய மரம், அதில் வியக்கத்தக்க தேன்கூடு என இவ்வாறு அமைந்த அந்தத் தேனினும் இனிய பொருள் உண்டோ?

**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை.***

## உயர்ந்த கேண்மையும் காவியமும்

உயர்ந்த கேண்மைக்கு உவமையாகக் கூறப்படுவது இந்தச் சந்தன மரத்துத் தேன் கூடு. இந்தப் புலவர் உயர்ந்த கேண்மைக்குத் தும்பியின் தேன் கூட்டை உவமையாகக் கூறியது போலவே திருவள்ளுவர் உயர்ந்த நட்புக்கு உவமையாகச் சிறந்த நூலை எடுத்துரைக்கின்றார்.

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.†**

இதனால் அறியத் தக்கது ஒன்று. பழங்காலத்துச் சான்றோரின் உள்ளத்தில் உயர்ந்த உறவுக்கு உவமை தேடியபோது தும்பியின் தேன் கூடு அல்லது புலவரின் காவியம் உவமையாக வந்தமைந்தது. மலர்களின் கொங்கு தேர்ந்து தும்பி இயற்றும் தேன்

*நற்றிணை 1
†திருக்குறள், 783.

கூடும் இலக்கியங்களை ஆராய்ந்து புலவர் இயற்றிய காவியமும் சான்றோர்க்கு ஒருநிகராகத் தோன்றின போலும்.

## புலவர் உறவு

தேன் நுகரும் தும்பிகள் பாடி மகிழ்வன ; கூடிக் களிப்பன. பாடாமல் இருத்தலும் அவைகளால் இயலாது ; ஒருங்கே கூடாமல் இருத்தலும் அவைகளால் இயலாது. இந்த இரு பெற்றியும் இலக்கியத் தும்பிகளாகிய புலவர்க்கும் அமைந்துள்ளன. தாம் கண்ட புதிய கற்பனைகளையும் தாம் உணர்ந்த புதிய உணர்வுகளையும் பிறர்க்கு எடுத்துரைக்காமல் அமைதியாக இருத்தல் புலவரால் இயலாது. தம் போன்ற மற்றப் புலவர்பெருமக்களோடு அளவளாவாமல் இருத்தலும் இயலாது.

**தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்**
**இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ**
**நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்து**
**உம்பர் உறைவார் பதி***

என்னும் பழைய பாட்டு, புலவர் தம்முள் கூடி மகிழும் இன்பத்திற்கு ஈடு இல்லை என்று பெருமிதத்தோடு எடுத்துரைக்கின்றது. "புலவர் கூட்டத்துள் பெறும் இந்த இன்பத்தை விட வானுலகின் சுவர்க்க இன்பம் இனியதானல் பிறகு காண்போம்" என்று புலவர் ஒருவர் கூறுவதாக அமைந்துள்ளது பாட்டு.

புலவர்க்குள் பொறாமையும் காழ்ப்பும் இருந்தனவாக வரலாறுகளும் கதைகளும் உள்ளனவே என

*நாலடியார், 14 . 7.

எடுத்துக்காட்டலாம். ஒன்று, அவ் வரலாறுகளும் கதைகளும் பொய் எனல் வேண்டும்; அல்லது, அவற்றில் கூறப்படுபவர் உயர்நோக்கு உடைய புலவர் அல்லர் எனல் வேண்டும்.

கீட்ஸ் என்னும் ஆங்கிலப் புலவர் இறந்த நான்காம் மாதம் அவரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த ஷெல்லி என்னும் புலவர் பாடிய அடொனே (Adonais) என்னும் காவியம் விழுமிய இலக்கியமாகத் திகழ்கிறது. அது, உண்மையான புலவரிடையே காழ்ப்புக்கு இடமில்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

புகழேந்தியார்க்கும் ஒட்டக்கூத்தர்க்கும் இடையே பகை மூண்டு கொலைமுயற்சி வரையில் வளர்ந்ததாகக் கதை கூறுகிறது. அதைக் கதை என மதித்தலே பொருந்தும். வரலாறு எனக் கொள்வதற்கு உரிய சான்றுகள் இல்லை.

புலவர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஒரு சில புறநானூற்றில் உள்ளன. அவை அகச்சான்றுகளாக அமைந்த குறிப்புக்களாகும். அவை அனைத்தும் இது போன்ற கதைகளைப் பொய்ப்படுத்துவன எனலாம்.

இளந்தத்தனர் என்ற புலவர் சோழன் நலங் கிள்ளியிடம் சென்று சில காலம் தங்கியிருந்தபின் உறையூர்க்குச் சென்றார். உறையூரில் அப்போது ஆட்சிபுரிந்தவன் சோழன் நெடுங்கிள்ளி. அவன் நலங் கிள்ளியுடன் பகை கொண்டவன். அதனல் புலவரின் வருகையைப் பற்றி ஐயுற்றான்; ஒற்றுக வந்திருத்தல் கூடும் என எண்ணினன்; அவரை மீண்டும் நலங் கிள்ளியிடம்செல்லுமாறுவிட்டுவிடின், தன் அரசுக்குக் கேடு விளைத்தல் கூடும் என அஞ்சினன்; அதனல்

புலவரைக் கொன்றுவிடுமாறு ஏவினன். இச் செய்தி கோவூர்கிழார் என்னும் புலவர்க்கு எட்டியது. இளந் தத்தனுக்கு வரும் கேடு தமக்கு வரும் பெருந்துன்பமாக உணர்ந்து வருந்தினர். அவர் உறையூர் வேந்தனை நெடுங்கிள்ளியிடம் நெருங்கிப் பழகியவர். ஆதலின் விரைந்து சென்று, "அரசே! பிறர்க்குத் தீது அறியாத வாழ்க்கை புலவர்தம் வாழ்க்கை. பகைவர் நாணுமாறு அண்ணாந்து நடக்கும் பெருமிதம் உடைய வாழ்க்கை இது. இவ்வாறு இனிது ஒழுகுதல் அல்லாமல், தலைமையும் எம் வாழ்க்கையில் உண்டு. புகழ் மிக்க வேந்தராகிய நும் போன்ற தலைமையும் உண்டு" என்றுகூறி, கொலை நிகழாமல் காப்பற்றினர்.

**......இப் பரிசில் வாழ்க்கை**
**பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே, திறப்பட**
**நண்ணார் நாண அண்ணாந் தேகி**
**ஆங்கினிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்**
**மண்ஆள் செல்வம் எய்திய**
**நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே.***

இவ் வரலாற்றுக் குறிப்பில் காழ்ப்பும் பகையும் அற்ற புலவர்வாழ்க்கையே புலப்படுகிறது.

## உவப்பத் தலைக்கூடல்

திருவள்ளுவர் ஒரு பெரும் புலவர். தாமரைத் தாது ஊதிச் சந்தன மரத்தில் தீந்தேன் தொடுத்த இலக்கியத் தும்பி அவர். அவர் இயற்றிய காமத்துப் பால் அவருடைய கற்பனைச் சிறகுகளின் அழகிய ஒளி வண்ணங்களைப் புலப்படுத்துகின்றது. தம் புலமை

*புறநானூறு - 47.

யின் அனுபவத்தை மற்றப் பால்களிலும் அவர் ஒரு சில இடங்களில் சுட்டிக்கூறியுள்ளார். புலவர்கள் எவ்வாறு கூடிப் பழகுவர் என்பதைக் கல்வி என்னும் அதிகாரத்துள் ஒரு குறளில் விளக்குகின்றார். கல்வியைப் பற்றி விளக்கவந்த இடத்தில் கல்வியின் பயன் நிரம்பப் பெற்றவர்களாய புலவர்கள் பழகும் பழக்கத்தின் மாண்பினை எடுத்துரைக்கின்றார். உள்ளம் உவக்க ஒருவரோடு ஒருவர் கூடி அளவளாவுவார்களாம். பிரிய நேர்ந்தபோது, "இனி மீண்டும் இவ்வாறு கூடி மகிழும் வாய்ப்பு எப்போது கிட்டுமோ" என்று ஏங்கி நினைந்து பிரிவார்களாம். புலவர்களின் வாழ்வு இத்தகையது என்கின்றார் திருவள்ளுவர்; புலவர்தொழில் எனச் சுட்டுகின்றார்.

> உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்.*

உயர்ந்த நோக்கமுடைய புலவர்கள் பொறாமையும் காழ்ப்பும் இல்லாமல் கூடி மகிழ்வர் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுவதில்லை.

## தேன் நுகர்தலின் பயன்

பொறாமையும் காழ்ப்பும் உள்ள உள்ளத்தில் உயர்ந்த புலமை வாழ்வதில்லை; பொறாமையும் காழ்ப்பும் மண்ணிலே புரள்வதன் அறிகுறிகளே அல்லாமல், விண்ணிலே பறப்பதன் அறிகுறிகள் அல்ல. அழகிய சிறகுகளைப் பெற்றிருந்தும் மலர்மணம் நுகராமல் சாணியில் புரளும் வண்டுகளின் வாழ்வில் உயர்வு ஏது?

*திருக்குறள், 394.

தாமரை மலரின் அருகே பறந்து சென்று தாது ஊதித் தேன் நுகராமல், இதழ்களையும் இலைகளையும் நுகரும் மணம் இருந்தால் என்ன பயன்? அவற்றைத் தின்று கொழுக்கும் விலங்காக வாழ முடியுமே அன்றி மலை உச்சியை அடைந்து சந்தனமரத்தை நாடித் தேன் தொடுக்கும் உயர்ந்த வாழ்வு வாழ முடியாது. கற்பனை நயம் காண முடியாமல் சொற்பொருள் ஆராய்ச்சியையும் சொல் இலக்கண ஆராய்ச்சியையும் கால ஆராய்ச்சியையுமே சிறப்பாகப் போற்றிக் காலம் கழிக்கும் மனம் இருந்தால் அத்தகையவர் காழ்ப்பும் பகையும் வளர்த்தல் எளிது. அவர்களும் சொற் பொருள் ஆராய்ச்சி, சொல் இலக்கண ஆராய்ச்சி, கால ஆராய்ச்சி இவற்றை ஓரளவில் நிறுத்தி இவற் றைக் கடந்து காவிய நயத்தையே பெரிதாகப்போற்றிக் கற்பனைத்தேன் நுகர்வாராயின், தும்பி போல் ஆவர்; தம்மை மறந்து பாடுவர்; மகிழ்வர். தம்மைப் போல் பாடிமகிழும் மற்ற இலக்கியத் தும்பிகளுடன் உவப்பத் தலைக்கூடுவர்; உள்ளப் பிரிவர். இத்தகைய புலவர் தொழில் பொருமையும் காழ்ப்பும் பகைமையும் அற்ற விழுப்பம் உடையதாக விளங்கும்.

தும்பிகள் தாமரை இலைகளையும் இதழ்களையும் பார்க்கின்றன; தின்பதில்லை. தாது எங்கே என்று நாடுகின்றன; ஊதுகின்றன; உறிஞ்சுகின்றன; உயரப் பறக்கின்றன; மலை உச்சியை அடைகின்றன; மலர்களிலே உயர்ந்த மலர்களையே நாடுவது போலவே மரங்களிலும் உயர்ந்த மரங்களையே நாடுகின்றன; தீந்தேன் தொடுக்கின்றன; ஒருங்கே இருந்து இசை முழக்குகின்றன; தாம் இழைத்த கூடே தனி உலகமாய் இருந்து வாழ்கின்றன; இனிய தேனை நுகர்ந்ததன்

பயனுக ஒன்றுபட்ட இனிய வாழ்வு நடாத்துகின்றன ; அவற்றிடையே பொருமை, காழ்ப்பு, பகை இல்லை ; ஒற்றுமை அன்பு இனிமை இவைகளே அவற்றின் வாழ்வில் விளங்குகின்றன. அவற்றைப் போல் வாழ வல்ல- உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிய வல்ல- புலவரே இலக்கியத் தேன் நுகரும் இனிய வாழ்வை எய்தியவர் ; ஏனையோர் அல்லர்.

## நட்பு

தலைவன் தலைவியைப் பாராட்டும்போது உள்ளத்துக்கு இனிய பண்பையும் எடுத்துரைக்கின்றுன் ; புலன்களுக்கு இனிய அழகையும் எடுத்துரைக்கின்றுன். தலைவியின் இனிய பண்புகளாக உள்ள பலவற்றையும் அவன் எடுத்துரைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒன்றைக் கூறுகின்றுன். பழகுதல் மிகுவதற்குக் காரணமான இனிய உறவு உடையவள் என்கின்றுன்.

தொடக்கத்தில் ஒருவர் எவருடனும் பழகலாம் ; அது மிக எளிதே ஆகும். அதில் அருமைப்பாடு ஒன்றும் இல்லை. பழகிய பழக்கம் நாளுக்குநாள் வளர்ந்து இனிய உறவு ஆவதுதான் அரிது. இன்னும் கூறப்போனல் மேன்மக்களோடு தொடக்கத்தில் பழகுவது பெருமுயற்சியாகவும் இருக்கும். கயவரோ, தொடக்கத்தில் மிக எளிதில் கலந்து பழகுவர் ; வலிய வந்தும் பழகுவர். நாளடைவில் அவர்களின் இயற்கைத் தன்மை வெளிப்படும்போது, அவர்களால் இன்னல்கள் விளையும்போது, ஏன் இவர்களோடு பழகினேம் என வருந்தவேண்டி யிருக்கும்.

அதற்கு மாருகச் சான்றேருடன் பழகுவோர் ஏன் இவரை அணுகினேம் என்று தொடக்கத்தில் வருந்த

வேண்டியிருக்கும். பழகப் பழக, அவரை விட்டுப் பிரிவதற்காகத்தான் வருந்த நேரும். ஜான்சன் என்னும் ஆங்கில அறிஞரைக் கண்டு பழகுவதற்காகப் பாஸ்வெல் என்பவர் ஸ்காட்லந்திலிருந்து லண்டன் மாநகரத்திற்கு வந்தாராம். அவரைக் கண்டதும் ஜான்சன் இனிய மொழிகள் கூறி வரவேற்கவில்லையாம்; இன்னா உரைகளே பகர்ந்தாராம். ஆயின் இவ்வாறு வெறுப்புடன் தொடங்கிய உறவு மிக இனிய நட்பாக வளர்ந்து, வாழ்நாள் முழுதும் பிரிவில்லாத சிறந்த கேண்மையாகத் திகழ்ந்து, வாழ்க்கை (Life) என்னும் விழுமிய ஆங்கில நூல் தோன்றுவதற்கும் காரணமாயிற்று. ஜான்சனின் வாழ்க்கை வரலாற்றைப் பாஸ்வெல் எழுதியதே வாழ்க்கை (Life) என்னும் அப் பெயர் அமைந்த நூலாகும். வாழ்க்கை வரலாற்று நூல்களுள் தலையாயது அது என்று போற்றப்பட்டு விளங்குகிறது.

ஆகவே, பழகப் பழக அன்பு முதிரும் இனிய உறவே சிறந்த நட்பாகும். வளர்பிறை போல் பழகப் பழக வளர்ந்து நிறைவது உயர்ந்தவர் நட்பு என்றும், தேய்பிறை போல் தேய்ந்து குறைவது அறிவிலார் நட்பு என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார் :

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.***

## நவில்தொறும் நயம்

உயர்ந்த இலக்கியம் தொடக்கத்தில் கற்பதற்குச் சிறிது இடர்ப்பாடாக இருத்தலும் உண்டு. ஆனால் பயிலப் பயில நம் சிற்றுயிர்க்கு உற்ற துணையாய்

*திருக்குறள், 782.

உள்ளத்தை விட்டு நீங்காமல் நிலைபெறுகின்றது. உயர்வற்ற நூல் – இழிந்த கருத்துக்களைச் சுவைபடப் பரப்பும் ஒரு நூல் – முதல்முறை படிக்கும்போதே உள்ளத்தைக் கவரும் ஆற்றல் பெற்றிருத்தல் உண்டு. ஆனால் அந்த நூலை ஏன் படித்தோம் என்று அருவருப்புக் கொள்ளவேண்டிய நிலையும் அடுத்துவரும்.

மற்றொன்றும் இங்குக் கருதத்தக்கது. தலைவன் உயர்ந்த பண்புடையவன். அதனால்தான் தலைவியிடம் அமைந்துள்ள உயர்ந்த பண்பை உணர்ந்து போற்ற முடிகின்றது. அதுபோல் ஓரளவு உள்ளம் பண்பட்டவரே உயர்ந்த இலக்கியத்தையும் போற்ற முடியும்; மற்றவர்களால் அது இயலாது. உள்ளம் பண்படாதவர்கள் இழிந்த புத்தகங்களையே எந்நாளும் போற்றி, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்தல் உண்டு.

ஆகவே வாழ்நாள் துணையாகப் போற்றிப் பழகுவதற்குரிய இலக்கியமாக உள்ளதைத் தேர்ந்துகொள்ளல் வேண்டும். அதுவே பழகுதல் மிகுந்த - பழகுதல் மிகுதற்குக் காரணமான இனிய பண்புகள் உடைய - நட்பாக அமையும். 'முகம் நக நட்பது' உயர்ந்த நட்பு அன்று. சிரித்து மகிழ்வதற்காக மட்டும் பழகுபவன் உயர்ந்தநண்பன் அல்லன். நாம் தவறுமிடத்து நம்மைக் கடிந்து கூறி நல்வழிப் படுத்துபவன் நல்ல நண்பன்.

> நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென்று இடித்தற் பொருட்டு.*

நூலின் தன்மையும் அவ்வாறே உணர்ந்து போற்றப் பட வேண்டும். வெறும் பொழுதுபோக்கிற்காக மட்

*திருக்குறள். 784.

டும் உதவும் நூல் உயர்ந்த நூல் அன்று. கற்பவர் நெறிதவறிச் செல்லாதவாறு கற்றுணர்ந்த நெறியைப் போற்றி அதற்குத் தக நிற்கச் செய்வது உயர்ந்த நூல் ஆகும். அதுவே தலைவன் தலைவியைப் பாராட்டியது போல், பயிலியது கெழீஇய நட்பு என போற்றத்தக்க உயரிய நூலாகும்.

## மயிலியல்

மயில் ஓர் இயற்கைக் காவியம். அதனிடம் அழகு உள்ளது. அந்த அழகு ஆடுகின்றது. ஓவியம் ஆடா அழகு என்றால் காவியம் ஆடும் அழகு ஆகும். காவியத்தின் அழகு அதன் கற்பனையில் மட்டும் இல்லை; உணர்ச்சியில் மட்டும் இல்லை; அதன் ஒலிநயத்திலும் உள்ளது. ஒலிநயம் (rhythm), காவியத்திற்கு-பாட்டிற்கு-இன்றியமையாதது. ஒலிநயம் இல்லாதது பாட்டு ஆகாது.

உயர்ந்த பாட்டு உள்ளத்தைக் கவர்தல் மட்டும் போதாது. செவிப்புலனையும் கவர்தல் வேண்டும். செவிப்புலன் ஒழுங்கான ஒலியைக் கேட்க விரும்புகின்றது. இசைக்கலையில் தேர்ந்த கலைஞரின் செவியை மட்டும் அல்லாமல், கலை உலகத்தையே எட்டிப் பாராத பாமர மக்களின் செவியையும் ஒலிநயம் கவர்கின்றது; ஒன்றும் அறியாத குழந்தைகளையும் கவர்கின்றது. ஒன்றும் அறிந்துகொள்ளமுடியாத விலங்குகளையும் கவர்கின்றது. காரணம் என்ன? உடம்பில் ஓடுகின்ற இரத்தம், நாடிகளின் துடிப்பு, இதயத்தின் இயக்கம், நுரையீரல்களின் வேலை முதலிய எல்லாம் ஒருவகை ஒழுங்குமுறைக்கு உட்பட்டவை; நயம்பெற நடைபெறுகின்றவை. அதனால்

இவற்ருேடு இயைந்த புலனும் ஒலிநயத்தைநாடு கின்றது.

மயிலின் நடனத்திலே, அடி எடுத்து வைக்கும் அசைவிலே, ஆடல் நயமும் அழகின் மென்மையும் உள்ளன. அவை பாட்டின் ஒலிநயத்திற்கு ஒப்பாகக் கூறத்தக்கவை.

தலைவியின் அழகைப் பாராட்டும் தலைவன் அவளிடம் மயிலின் சாயலைக் காண்கின்ருன். அவளுடைய மேனியிலும் மேனி அசைவிலும் காணும் மென்மை அவனுக்கு மயிலை நினைவூட்டுகின்றது.

சாயல் என்பது மென்மைப் பண்பு; அதுவே மயிலியல்.

நீர் மென்மை உடையதாகப் புலவர் கூறுவர். 'நீரோர் அன்ன சாயல்' என்று தலைவியின் பண்பைப் பாராட்டுவதும் உண்டு.

பாட்டிலே நீரின் தன்மை உள்ளது. செவிக்கு இனியதாய் நெகிழ்ந்து இயங்கும் தன்மை பாட்டிற்கு இயல்பாக உள்ளது. வல்லோசை மிகுந்த பாட்டிலும் ஒருவகைச் சாயல் அமைந்துள்ளது. ஆகவே உணர்ச்சிக்கு வடிவு தரும் பாட்டை நீர் என்றும், அறிவின் திட்பம் செறிந்த மற்றச் செய்யுளை மண்ணென்றும் கூறலாம். நீரின் மென்மையை – மயிலின் சாயலைத் தன்னகத்தேகொண்டு, கற்பவரின் செவிப்புலனுக்கும் விருந்து நல்குவது விழுமிய பாட்டாகும்.

## ஒலிநயம்

உணர்ச்சியுடன் கூடிய கற்பனையே போதாதோ, பாட்டிற்கு ஒலிநயமும் வேண்டுமோ என வினவலாம். ஒலிநயமும் இன்றியமையாததாக உள்ளது.

3814



நாம் வாழும் உலகத்தை விட்டுக் கற்பனை உலகத்திற்கு மாறுவதற்கு ஒலிநயம் துணைசெய்கிறது. ஓடி ஆடி விளையாடும் குழந்தை, தெருவையும் வீட்டையும் தாயின் மடியையும் தோளையும் ஒருவாறு மறந்து கனவுலகத்திற்குச் செல்வதற்குத் தாலாட்டுத் தேவையாக இருக்கின்றது. குழந்தையின் செவியில் ஒழுங்குபட்ட அந்த இனிய ஒலி பாய்ந்து அதன் மென்மையான நரம்புகளுக்கு ஒருவகை மயக்கம் ஊட்டி ஓர் உலகத்தை விட்டு மற்றோர் உலகத்திற்கு மாறச் செய்கிறது. அதுபோலவே இந்த உலகத்தை விடப் பெரிதும் வேறுபட்டதாக உள்ள பாட்டுலகத்திற்குத் தாவுவதற்கு ஒலிநயம் தேவையாக உள்ளது; செவிப் புலன் வாயிலாக ஒலிநயம் ஊட்டும் மயக்கம் தேவையாக இருக்கின்றது. பாட்டுலகில் அறிதுயில் கொள்வதற்கு இந்த ஒலிநயம் இன்றியமையாததாக உள்ளது.*

தலைவியின் பயிலியது கெழீஇய நட்பு ஒன்றே போதாதோ? மயிலியல் ஏன் வேண்டும்? அவளுடைய உள்ளத்திற்கு இனிய பண்பு நன்கு விளங்குவதற்கு மயில் போன்ற மென்மைத் தன்மை துணைசெய்கின்றது. மணம் பொதிந்து விளங்குவதற்கு மலரின் மென்மை உதவிபுரிகின்றது அன்றோ? தலைவியின் இனிய பண்பு விளங்குவதற்கும் அவளுடைய

*Rhythm is, no doubt, the most valuable use in literary art of the sound of words; since for the most part it is rhythm which conveys the emotional atmosphere without which experience could not live. (L. Abercrombie, Principles of Literary Criticism. p. 50)

மயிலியல் துணையாக உள்ளது. பாட்டின் கற்பனை உணர்ச்சி புலப்படுவதற்கு அதன்கண் களிநடம் புரியும் ஒலிநயம் உதவியாக உள்ளது.

## செறி எயிறு

தலைவியின் முத்துப் போல் செறிந்த பற்களை நினைக்கும்போது, பாட்டில் அமையும் செஞ்சொற்களையும் அவை நயம்பட அமையும் அமைப்பையும் எண்ண வேண்டியுள்ளது. தக்க சொற்கள் உரிய இடங்களில் வந்து ஆற்றலுடன் அமையும் திறன் (Diction) சிறந்த புலவர்களின் பாட்டுக்களில் காணப்படுகின்றது. புலவர்கள் அத்தகைய சொற்களை அரிதின் முயன்று தேடி அமைக்கிறார்கள் என்று கூறுதல் பொருந்தாது. தக்க சொற்கள் தாமே வந்து அமைந்து பாடுவோரின் புலமைச் சிறப்பால் ஆற்றல் பெறுகின்றன என்று கூறுதல் பொருந்தும். முத்துப் போல் செறிந்த பற்கள் தலைவிக்கு இயற்கையாக அமைந்து அவளுடைய அழகை எடுத்துக்காட்டுதல் போல், தக்க செஞ்சொற்கள் இயற்கையாக அமைந்து பாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. உயர்ந்த ஒன்று கவர்ச்சி பெற விளங்குவதற்கு அழகிய சூழ்நிலை வேண்டும். பள்ளிக்கூடம் கல்வி புகட்டுதற்கு என்றே அமைந்தது. ஆகவே அங்கு வேண்டுவன கல்விக்குரிய கருவிகளே. ஆயினும் சுற்றுப்புறத்தில் தூய்மையும் எழிலும் இல்லையேல் கல்விக்குரிய முயற்சி எல்லாம் வீணாகின்றன. தூய்மையும் எழிலும் அமைந்து உள்ளத்திற்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டினால்தான் கல்விக்குரிய ஆர்வம் தழைத்து விளங்குகின்றது. தேர்ந்த ஆசிரியர்களும் ஊக்கமுள்ள மாணவர்களும் அமைந்த

போதிலும் பள்ளிக்கூடத்தில் தூய்மையும் அதன் சுற்றுப்புறத்தில் பூங்காவின் எழிலும் வேண்டுவன வாக உள்ளன. பழகுதற்கு இனிய உள்ளத்துப் பண்பு அமைந்த தலைவியே ஆயினும் அவளுடைய புறத்தோற்றத்தில் நகைமுகம் வேண்டுவதாக உள் ளது. நகைமுகத்திற்குக் காரணமான முத்துப் போல் செறிந்த பற்களும் வேண்டுவனவாக உள்ளன. இனிய மணம் உள்ள தாமரை மலர்க்கு அழகிய இதழ் கள் தேவையாக இருத்தல் போல், கற்பனை உணர்ச்சி அமைந்த பாட்டிற்கும் ஆற்றல் மிக்க செஞ்சொற்கள் தேவையாக உள்ளன. ஓவியக் கலைஞனுக்கு வண்ணங் கள் எவ்வாறு இன்றியமையாதனவோ, அவ்வாறு செஞ்சொற்கள் கவிஞனுக்கு இன்றியமையாதன. அதுபற்றியே பாட்டைச் சொல்லோவியம் என்னும் வழக்கு உளதாயிற்று.*

*1802*-ல் வோர்ட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலப் புலவர் 'குயிலுக்கு' என்று ஒரு பாட்டு எழுதினர். அதில் குயிலுக்குத் தக்க அடை ஒன்று வாய்க்காமல் வருந்தினராம். *1807, 1815, 1820, 1827* ஆகிய ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் அந்தப் பாட்டை எடுத்துப் பார்த்து அந்த அடை வாய்க்காமல் விட்டு விட்டாராம். கடைசியாக *1845*-ல் அதையே எடுத் துப் பாடிக்கொண் டிருந்தபோது 'திரியும் குரல்' (wandering voice) என்ற அடைமொழி தானே கிடைக்கப்பெற்று மகிழ்ந்தாராம். நாற்பத்துமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் அடைமொழி பொருந்தி

*All writers use words as the painter uses colours and the musician notes. (P. H. B. Lyon, The Discovery of Poetry, p. 176)

வர நேர்ந்தது என்பதை அந்தப் புலவரின் தங்கை குறித்து வைத்திருத்தலால், அதன் அருமையை நாம் இன்று அறிய முடிகின்றது. சில செஞ்சொற்கள் தொடக்கத்தில் வாய்க்கும்; வேறு சில செஞ்சொற்கள் அமைவதற்கு ஆண்டு பல ஆதலும் உண்டு என்பதை இதனால் அறியலாம்.

## அரிவை

பழகுவதற்கு இனிய பண்பும் மயிலியலும் நகை முகமும் உடைய தலைவி, தலைவனுடைய வாழ்க்கைத் துணையாகின்றாள். நவில்தொறும் நயம் பயக்கும் திறனும் இனிய ஒலிநயமும் செஞ்சொற்களின் அமைப்பும் உடைய நூல் ஒருவர்க்கு வாழ்க்கைத் துணையாதல் வேண்டும்.

தமிழைநன்குகற்று வாழ்க்கையைப்பண்படுத்திக் கொள்ள விரும்புவோர்க்குத் திருக்குறள் வாழ்க்கைத் துணையாக விளங்குகின்றது. புறநானூறு நெடுந் தொகை குறுந்தொகை முதலியனவும் அவ்வாறே சிலர்க்கு அமைகின்றன. இளங்கோவடிகளின் சிலப் பதிகாரம் சிலர்க்கு அருந்துணையாகின்றது. மூவர் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி முதலியன சிலர்க்கு வாழ்க்கை நூல் ஆகின்றன. தேவர்காவியமும் சேக்கிழார்காவியமும் கம்பர்காவியமும் சிலர்க்கு வாழ்க் கைத் துணையாக விளங்குகின்றன. தாயுமானவரின் பாடல்களும் வள்ளலாரின் அருட்பாவும் அவ்வாறே சிலருடைய வாழ்க்கைக்குப் பற்றுக்கோடாக உள்ளன. அருகர் புத்தர் நெறிகளும், ஏசு நபி முதலியவர் களின் அருண்மொழிகளும் பலர்க்கு இவ்வாறே வாழ் வுக்குத் துணைபுரியும் நூல்களாக அமைகின்றன.

## உயிர்த்துணை

உலகம் போற்றும் சான்றோர் காந்தியடிகளுக்குப் பகவத்கீதை உயிரினும் இனியதாக விளங்கியது. எல்லாவற்றையும் கைவிட்டு இமயத்தை நாடிச்சென்ற துறவியாகிய விவேகானந்தர் கிறிஸ்துவைப் பின் பற்றல் (Imitation of Christ) பகவத்கீதை ஆகிய இரு நூல்களை மட்டும் இருகண்களைப் போல் போற்றி எடுத்துச்சென்றார். அவரவர்கள் பிறந்தநாடு, பயின்ற மொழி, வாழும்சூழ்நிலை, போற்றும் கொள்கை ஆகியவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு நூலைச் சான்றோர் தம் உயிர்த்துணையாகப் போற்றுகின்றனர். அந்தந்த நூல்களே அவர்களுக்கு இனிய காவியங்கள் ஆகின்றன. அவர்களின் உயரிய கற்பனைகளை எல்லாம் அந்த நூல்களிலே காண்கின்றனர். அவற்றின் ஒலிநயமே அவர்களின் செவியில் களிநடம் புரிகின்றது. அவற்றின் செஞ்சொற்களே அவர்களுடைய அறிவின் காட்சிக்கு ஒளிவிட்டுத் திகழ்கின்றன.

காவியத்தைவாழ்க்கைத்துணையான பெண்ணுடன் சேர்த்துப் பாடியுள்ளனர் புலவர் சிலர். பாரசீக உமர் கயாம் பாடலை* ஒட்டிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிய பாட்டில்,

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
    வீசும் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
    கலசம் நிறைய மதுவுண்டு

---

*Here with a Loaf of Bread
beneath the Bough ;
A Flask of Wine, a Book of
Verse - and Thou

*தெய்வ கீதம் பலவுண்டு*
*தெரிந்து பாட நீயுமுண்டு*
*வையம் தருமிவ் வனமன்றி*
*வாழும் சொர்க்கம் வேறுண்டோ*

என்று அமைத்த கருத்தும் இதற்குச் சான்றாகும்.

விழுமிய பாட்டு ஓர் உயர்ந்த பெண்ணே ஆகும்; பாட்டிலே பெண்மை விளங்குகின்றது. பயில்வதற்கு இனிய பண்பும் மயிலியலும் நகைமுகமும் பாட்டில் விளங்குதலை மேலே கண்டோம்.

## நறியவும் உளவோ

"என் காதலியின் கூந்தல் போல் மணம் கமழும் மலர்களை நீ அறிந்தது உண்டோ?" என்று தும்பியை நோக்கி வினவும் தலைவனுக்கு ஐயப்பாடு இருப்பதாகக் கூற இடம் இல்லை. தன் காதல் மிகுதியால் காதலியின் கூந்தல் மணமே சிறந்தது என்று பாராட்டும் உள்ளமே அவனுடைய வினாவில் புலனாகின்றது. கொங்குதேர் வாழ்க்கை உடைய தும்பி பல மலர்களின் பலவகை நறுமணங்களை நுகர்ந்து உணர்ந்திருந்த போதிலும், கூந்தல் மணம் போன்ற ஒன்றை எங்கும் அறிந்திருத்தல் இயலாது என்பதே அவன் கருத்து. காமம் செப்பாது உண்மையாகக் கண்டதை மொழியுமானால் கூந்தலின் மணமே சிறந்தது என்று தும்பி

---

Beside me singing in the
Wilderness—
And Wilderness is Paradise
enow.

—*Omar Khayyam, XI*

யும் சொல்லிவிடும் எனக் கருதுகின்றான். ஆகவே அவன் தும்பியிட மிருந்து எதிர்பார்ப்பது தன் ஐயத்தைத் தீர்க்கும் விடை அன்று; தன் கருத்திற்கு அரண் செய்யும் சான்றேயே எதிர்பார்க்கின்றான்.

## உள்ளம் கவர்ந்த ஒன்று

இலக்கிய ஆராய்ச்சி செய்வோரும் எவ்வளவு பற்றற்ற உள்ளத்துடன் ஆராயத் தொடங்கினும் தம் உள்ளம் கவர்ந்த ஒரு நூல் – தாம் வாழ்க்கைத் துணையாகக் கொண்ட ஒரு நூல் – ஒப்புயர்வற்ற விழுப்பம் உடையது என்ற கருத்தைக் கைவிடுதல் அரிது. இந்த ஒரு நூல் போல் சிறந்தது உண்டோ என்ற பாராட்டு உள்ளத்தில் நிலைத்திருக்க, காமம் செப்பாது கண்டது மொழிதல் என்ற ஆராய்ச்சி ஒரு புறம் நிகழும். இயல்வது அவ்வளவே அன்றி, தாம் போற்றும் நூல் பற்றிய ஆர்வத்தை மறத்தலோ துறத்தலோ இயலாது.

ஆகவே அவர் நடுநிலையாக நின்று செய்யக் கூடிய ஆராய்ச்சி மற்ற நூல்களின் அளவில் பொருந்துமே அன்றி, தம் வாழ்க்கையோடு தொடர்பு படுத்திப் போற்றும் அந்த ஒரு நூலின் அளவில் பொருந்தாது. அது அவர்க்குக் காதல் துணை ; "இதனினும் நறியவும் உளவோ ?" என்றுதான் அவரது காதல் உள்ளம் மற்றவரை நோக்கி வினவும். இல்லை – இதனினும் நறியவை இல்லை-என்ற பெருமிதத்தோடுதான் அவருடைய ஆராய்ச்சி நடைபெறல் இயலும்; இது இயற்கை.

## மனம் உயர்தல்

தும்பிகளுக்கு இல்லாத சிறப்பு மக்களின் மனத்திற்கு உள்ளது. நண்டுகள் தும்பிகள் ஆவதில்லை ;

நாரைகள் தும்பிகள் ஆவதில்லை. தும்பிகளும் நண்டு நாரைகளைத் தம்மோடு சேர்த்துக்கொள்வதில்லை ; தாமரைத் தண்தாதிற்கும் சந்தனமரத் தேன்கூட்டிற்கும் அவைகளை அழைத்துச்செல்வதில்லை. தேன் கூட்டில் சேர்த்து வைத்த தேனை மற்ற உயிர்கட்குப் பகிர்ந்து அளித்தலும் இல்லை.

ஆனால் நண்டுகளாகவும் நாரைகளாகவும் உள்ள மக்களின் மனங்கள் தும்பிகளாக உயர்வதற்கு இடம் உண்டு. புலமைத்தும்பிகள் இந்தப் புதிய தும்பிகளைத் தாமரைத் தண்தாது ஊதும்போதும் அழைத்துச் செல்லும் ; சந்தனமரத்தில் தீந்தேன் தொடுக்கும் போதும் அழைத்துச்செல்லும் ; தொடுத்த தீந்தேனை உடன் இருந்து நுகருமாறும் அழைத்து மகிழும். தாம் இன்புறுவது உலகு இன்புறக் காணும் ஆர்வம், இந்தப் புலமைத்தும்பிகளுக்கு இயல்பாக உள்ளது.

## வரையாது வழங்குதல்

அரிதில் பெற்ற பொருளை "எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே" என்று வரையாது வழங்குதல் போலவே, தாம் முயன்று பெற்ற காவிய இன்பத்தைப் பலரும் பெற வேண்டும் என்று புலவர்கள் விழைதல் இயற்கை. இன்னோர்க்கு என்ற வரையறை இல்லாமல் வழங்குவர் ; வல்லமையோடு பிறர் மதிக்க வாழ வேண்டும் என்ற ஆசையும் இல்லாமல் எல்லோர்க்கும் எளியராய் இலக்கியத் தேனை வாரி வழங்குவர்.

*நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்*
*பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழநின்*

*நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே**

என்று புலவர் பெருஞ்சித்திரனார் தம் துணைவியிடம் பரிசிற்பொருளைக் கொடுத்து எல்லார்க்கும் வாரி வழங்குமாறு கூறிய அந்த வண்மை, உயர்ந்த புலவர் அனைவருக்கும் இலக்கியத்துறையில் இயல்பாக அமைந்திருக்கிறது.

இத்தகைய இலக்கிய வண்மை இருத்தலால் பிற துறைகளில் நண்டுகளாய் நாரைகளாய் வாழ்வோர்க்கும் தாது ஊதும் வாய்ப்பும் தேன் நுகரும் பேறும் எளிதில் கிடைத்துவிடுகின்றன. அதனால் புலமையைத் தொழிலாகக் கொள்ளாது, வேறு தொழில் பற்றி வாழ்வோருக்கும் இலக்கியப் பயன் கிடைத்து விடுகின்றது. தும்பிகளின் தேன்கூட்டில் சேர்ந்த தேன் தும்பிகளுக்கே உரியதாக இருக்க, புலவர்கள் இழைத்த இலக்கியத்தேன் விரும்புவோர் எல்லார்க்கும் உரியதாகப் பயன்படுகின்றது. பொழுதுபோக்கு என்னும் அளவிலேனும் புலவர் அல்லாதவரும் இலக்கியத் தேனை நுகர முடிகின்றது.

## தமிழகம் : பூங்கா

பொழுதுபோக்காகக் கொங்குநுகரும் வாய்ப்புப் பெற்றவர்களில் சிலர், கொங்குதேர் வாழ்க்கை உடையவர்களாக மாறிவிடுதலும் உண்டு. வணிகரிலே சிலர் புலவராக மாறினர். அவர்கள் : காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார், உறையூர்

*புறநானூறு, 163.

இளம்பொன் வாணிகனார், செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் முதலியோர்.

மற்றத் தொழிலாளரிலே புலவராக மாறினவரும் உண்டு. கணியன் பூங்குன்றனார், கண்ணகாரன் கொற்றனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைக்கூத்தனார், மதுரைத் தமிழ்க்கூத்தனார், மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார், மதுரைப் பெருங்கொல்லன், முதுகூத்தனார், வினைத்தொழில் சோகீரனார் முதலானோர் அவ்வகையார்.

நாட்டை ஆளும் பொறுப்பை மேற்கொண்ட வேந்தர்கள் சிலர் இலக்கியத்தும்பிகள் ஆயினர்: பாண்டியன் அறிவுடை நம்பி, ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன், இளம்பெருவழுதி, உக்கிரப் பெருவழுதி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கோப்பெருஞ் சோழன், சேரமான் இளங்குட்டுவன், சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் நல்லுருத்திரன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாண்டியன் பன்னாடுதந்தான், பாண்டியன் மாறன்வழுதி, பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ முதலானோர் அத்தகையார்.

பற்றறத் துறந்த துறவியரிலே சிலர் இத்தகைய கொங்குதேர் வாழ்க்கைத் தும்பிகள் ஆயினர். சிலம்பு

பாடிய இளங்கோவடிகளும், சிந்தாமணி பாடிய திருத்தக்கதேவரும், பலதிற நூல்கள் இயற்றிய குமரகுருபரரும், சிவப்பிரகாசரும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் கூறத்தக்கவர்.

தட்ப வெப்பம் அளவுபட அமைந்து மரம் செடி கொடிகளில் பூத்த மலர்கள் மணம் கமழ்ந்து விளங்குதற்கு ஏற்ற வளமுடைய நாடு இது. தண்மை மிகுந்த நாடுகளில் மலரும் மலர்கள் மணம் நிரம்பாதனவாக உள்ளன. வெம்மை மிகுந்த நாடுகளில் மரம் செடி கொடிகள் தழைத்து மலர்தல் அரிதாக உள்ளது. தட்ப வெப்பம் அளவாக அமைந்த தமிழ்நாடோ, மணம் கமழும் மலர்கள் மிகுந்ததால், தும்பிகள் பாடிப் பறந்து வாழ்வதற்கு உகந்ததாய் உள்ளது. புறத்தே அமைந்த இச் சூழ்நிலை அகத்திலும் உள்ளது போலும்! இந்நாட்டில் சோலையெல்லாம் தும்பிகளின் இசை முழக்கம் சிறந்திருப்பதுபோலவே, ஊரெல்லாம் மக்களின் இசை முழக்கமும் மிகுந்திருக்கிறது. மக்கள் வாழ்வெல்லாம் பாட்டாக உள்ளது. பிறந்தாலும் பாட்டு; இறந்தாலும் பாட்டு; தொட்டிலிலும் பாட்டு; கட்டிலிலும் பாட்டு; உழுதாலும் பாட்டு; உலக்கையால் குற்றினாலும் பாட்டு; நாற்று நட்டாலும் பாட்டு; ஏற்றம் இறைத்தாலும் பாட்டு; களை கட்டாலும் பாட்டு; காதல் புரிந்தாலும் பாட்டு; அறுவடையிலும் பாட்டு; போரடித்தலிலும் பாட்டு; எத்தொழிலைச் செய்தாலும் பாட்டு; எவ்வகைப் பொழுதுபோக்கிலும் பாட்டு. மக்கள் எல்லாரும் இலக்கியத் தும்பிகளாக இல்லாவிடினும் இவ்வாறு வாழ்வெல்லாம் பாடல் முழக்கமாக உள்ள நாடு இது. ஆகவே இந்நாட்டில் பாட்டுக்கலை தனிச்சிறப்புடன் வளர்ந்திருத்

தலில் வியப்பு ஒன்றும் இல்லை. கூந்தல்மணம் பற்றிப் பாடும் இந்தப் பாட்டின் கற்பனை பலருடைய உள்ளத்தில் பலவாறு வளர்ந்ததிலும் வியப்பு இல்லை.

## ஆராய்ச்சித் தூண்டுகோல்

பாட்டின் அமைப்பே ஆராய்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது. கூந்தலின் மணம் பற்றி வண்டின் ஆராய்ச்சியைக் கேட்கிறான் காதலன்; துணைவியின் கூந்தல் மணம் இயற்கையா செயற்கையா என ஆராய்கிறான் பாண்டியன்; இப்பாட்டுக் குற்றமற்றதா குற்றமுடையதா என்று ஆராய்கின்றனர் சங்கப் புலவர்களும் நக்கீரனும்.

இப்பாட்டு நம் உள்ளத்திலும் ஓர் ஆராய்ச்சியைத் தூண்டுகிறது. இலக்கிய ஆராய்ச்சிக்குரிய முறை யாது, எது உயர்ந்த ஆராய்ச்சி என்று ஆராயுமாறு நம்மைத் தூண்டுகிறது இப்பாட்டு.

## உணர்வா? உண்மையா?

வண்டு உண்மையைச் சொல்லுமோ, தன் உணர்வையே சொல்லிவிடுமோ எனக் காதலன் ஐயுறுகிறான். அதனால்தான் 'காமம் செப்பாது கண்டது மொழிமோ' எனக் கூறுகிறான். வண்டு தான் விரும்பியதைக் கூறலாம்; அது விரும்புவது எதனை? தனக்குத் தேன் நல்கும் மலரைத்தான் வண்டு விரும்பும். தனக்கு ஒரு பயனும் தராத கூந்தலைவிடத் தான் நுகர்வதற்குத் தேன் தரும் மலரின் மணமே சிறந்தது என்று ஒருகால் வண்டு கூறினும் கூறிவிடும். ஆகையால், 'நீ விரும்பியதைக் கூறாதே; நீ கண்ட உண்மையை மட்டும் கூறு' என்கிறான் காதலன்.

மற்றொரு வகையில் உண்மையைக் கூறுமல் தவறுவதற்கும் இடம் உண்டு. தலைவன் தலைவியைக் கண்டது அவன் வாழும் மலைப்பகுதியில் ஆகும். தலைவியின் மலையில் பறந்து உணவு தேடும் பழக்கத்தால் தும்பி அவளிடம் நன்றி உணர்ச்சி உடையதாய் அவளுடைய கூந்தலையே புகழ்ந்துகூற முன்வருதல் கூடும். அந்த மலைப்பகுதிக்கு உரிமை உடையவளாகிய தலைவியும் இந்த விஞ நிகழும்போது உடன் இருந்தலால், தும்பி அவளைக் கண்டு அவள்சார்பாக நின்று அவளுடைய கூந்தலை வேண்டுமென்றே உயர்த்திக் கூறுமோ என்று தலைவன் எண்ணுகிறுன் போலும். ஆகையால், “சொல்ல வேண்டும் என்று விரும்பும் உன் விருப்பத்தைச் சொல்லாதே ; நீ கண்ட உண்மையைச் சொல்” என்கிறுன்.

அல்லது, இன்னெரு தவறு நிகழ்வதற்கும் இடம் உண்டு. இத் தும்பி குறிஞ்சி நிலத்து வாழ்வது; தலைவனும் குறிஞ்சி நிலத்தான். “என் நிலத்து வண்டு” என்று தலைவன் உணர்வதாக நச்சினர்க்கினியர் குறிக்கின்றுர். ஒரு நிலத்துத் தொடர்பு பற்றி நடுநிலையில் நின்று உண்மையைக் கூறுமல் தலைவனுடைய உள்ளம் மகிழட்டும் என்று அவன் சார்பாக நின்று விடை கூறிவிடலாம்; கூந்தலின் மணமே சிறந்தது எனக் கூறிவிடலாம். “தும்பி! என் நிலத்தில் வாழும் உறவைக் கருதி எனக்காகக் கூறுதே. நடுநிலையாக நின்று நீ கண்ட உண்மையைச் சொல்” என்கிறுன்.

### நடுநிலைமை

ஒரு நூலை ஆராயும் புலவர் அந்த நூலின் சிறப்பையோ சிறப்பின்மையையோ நடுநிலையாக நின்று

ஆராயாமல் பிறழ்வதற்கு இடம் உண்டு. தும்பி, தனக்கு உணவு நல்குவது மலர் ஆதலின், மலர்களின் மணமே சிறந்தது என்று கூற இடம் உள்ளது அன்றோ? அதுபோலவே புலவர் தம்மைப் புரக்கும் புரவலர் விரும்பும் கருத்து எதுவோ அதையே தாமும் போற்றி நடுநிலை பிறழ்தல் கூடும். தும்பி, தான் வாழும் மலைக்கு உரியவராய் இருத்தல் பற்றித் தலைவியின் உள்ளமும் தலைவனின் உள்ளமும் மகிழும் வகையில் 'காமம் செப்புதல்' உண்டு அன்றோ? அதுபோலவே நூலை ஆராயும் புலவரும் தாம் பிறந்து வாழும் நாடு, மாவட்டம், ஊர் முதலிய தொடர்பு பற்றி உண்மையைக் கூறாமல் நடுநிலை பிறழ்வதற்கும் இடம் உண்டு.

## சீர்தூக்கும் கருவி

ஒரு பக்கம் மலர்களின் மணம்; மற்றொரு பக்கம் கூந்தலின் மணம். இரண்டையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கி உண்மை உரைக்க வேண்டும். ஒப்பிட்டுச் சீர்தூக்கும் கருவி எது? மணம் நுகரும் புலனும் மனமுமே ஆகும்.

மனம் எத்தகையது? விருப்பு வெறுப்பு மிகுந்தது. விருப்பும் வெறுப்பும் மிகுந்த ஒன்று எப்படி உண்மை காண முடியும்? இன்று உயர்ந்ததாக உள்ள ஒன்றே நாளை வெறுப்பு வந்தபோது இழிந்ததாகத் தோன்றும். இன்று இழிந்ததாக உள்ள ஒன்றே நாளை விருப்பு வந்தபோது உயர்ந்ததாகத் தோன்றும். ஆகவே மனத்தின் அளவுகோல் நடுநிலையானது அன்று.

மனத்தோடு தொடர்புபடாத அளவுகோல் ஒன்று புறத்தே இருந்தால் உண்மையை அளந்து கூறுதல்

எளிது. இந்தக் களஞ்சியத்தில் உள்ள நெல் மிகுதியா, அந்தக் களஞ்சியத்தில் உள்ள நெல் மிகுதியா எனின் மரக்கால் கொண்டு அளந்து கூறிவிடலாம். மரக்கால் புறத்தே உள்ள கருவி; மனத்தின் விருப்பும் வெறுப்பும் அக் கருவியைத் தாக்க முடியாது; உண்மையை மறைக்க முடியாது.

எட்டும் இரண்டும் பத்து; விரும்பினாலும் பத்தே; வெறுத்தாலும் பத்தே. எண் என்னும் கருவியால் உண்மையை உரைக்கமுடியும்.

கார்காலம் பிறந்து விட்டதா, இல்லையா என ஐயுறும்போது, தலைவி "இது கார்காலமே" என்பாள்; தோழி "அன்று, அன்று; இப்போது பெய்த மழை கார்கால மழை அன்று. இது பழைய மழை. எஞ்சிய நீரைப் புதிதாகப் பெய்துவிட்டுச் சென்றது; வம்பு மழை" என்பாள். மனமே அளக்கும் கருவியாக இருக்கும்போது தெளிவுக்கு வழி இல்லை. நாளும் கோளும் அறியும் நூலோ, அல்லது நாளும் திங்களும் காட்டும் குறிப்போ (Calendar) கொண்டு ஆராய்ந்தால், ஆவணித் திங்கள் பிறந்துவிட்டதா, இல்லையா என்பதைத் தடுமாற்றம் இல்லாமல் கூற முடியும்.

## அளவு கருவி

மனம், புலன்கள் வாயிலாக வளர்ந்தது. ஆகவே ஒன்றைப்பற்றி நின்று அதைக்கொண்டு மற்றொன்றை அறிதல் மனத்தின் இயல்பாக உள்ளது. இத்தகைய பற்றுக்கோடின்றித் தனித்துநின்று உணரும் ஆற்றல் மனத்திற்கு இல்லை. அதனால்தான் ஒரு நெறியையோ, ஒரு நூலையோ, சான்றோர் ஒருவரையோ பற்றிக் கொண்டு வாழ்கின்றவர்களே மனம் தடுமாறாமல்

விளங்குகிறுர்கள் ; மற்றவர்களின் மனம் அத்தகைய பற்றுக்கோடு இல்லாமையால் தடுமாறுகிறது. பொருள்களே அளந்தறியும் முறையிலும் இதே தன்மையைக் காணலாம். வெல்ல உருண்டை ஒன்றை ஒருவர் கையிலே கொடுத்து இது எவ்வளவு என்று கேட்டால் அவர் சொல்லத்தெரியாமல் தடுமாறுவார். முன்னமே எடைபோட்டு அறிந்த வெல்ல உருண்டை மற்ருென்று அவர்கையில் இருக்குமாஞல் அதையும் இதையும் சீர்தூக்கி 'அதைவிட இது சிறிது மிகுதி' என்பார்; அது முப்பது பலம் ஆயின் இது முப்பத்தைந்து பலம் இருத்தல் கூடும் என்பார்; அல்லது, அவர்கையில் தராசும் எடைக்கற்களும் இருக்குமாஞல் தயங்காமல் எடைபோட்டு முப்பத்தாறு பலம் என்று கணக்காகச் சொல்லிவிடுவார். ஆராய்ந்து அறியவேண்டிய பொருளுக்குப் புறத்தே பொதுவான அளவுகருவி ஒன்று இருக்குமேயாஞல் அதைப் பற்றுக்கோடாக் கொண்டு பொருளே அளந்து கூறுதல் எளிதாகிறது. நீட்டல், முகத்தல் ஆகிய அளவுகளிலும் இவ்வாறு அளவுகருவிகள் மனத்தின் தடுமாற்றத்தை ஒழிக்க உதவுகின்றன. இவ்வாறு அளந்தறியும் போது மனத்தின் விருப்பு வெறுப்புக்கள் ஒதுங்கி நிற்கின்றன. வேண்டுதல் வேண்டாமை இல்லாத நிலையில் பொதுவான அளவு கருவிகளேக் கொண்டு அளந்து உண்மையை உணர்தல் எளிதாகிறது.

தட்ப வெப்ப நிலேகளே அளந்து உணர்த்தும் கருவிகளும் இப்போது உள்ளன. நீரின் வேகம், காற்றின் வேகம் முதலியவற்றை அளந்துகாட்டும் கருவிகளும் ஏற்பட்டுள்ளன. ஆஞல் பொருள்களின்

அழகு, இனிமை, இன்பம், துன்பம் முதலியவற்றை அளந்து காட்டும் கருவிகள் இல்லை. ஆதலின் மனம் அவற்றை அளந்தறியும்போது ஒன்றைப் பற்றி நிற்க முடியவில்லை. தன் விருப்புவெறுப்புகளுக்கு ஏற்ற படி அழகு முதலியவற்றை ஆராய்ந்து உரைக்க முனைகின்றது. பொதுவான அளவுகருவி இல்லாத காரணத்தால் தன் விருப்புவெறுப்புக்களைக் கொண்டு அளந்துபார்க்க முனைகின்றது. ஒதுக்க வேண்டிய விருப்புவெறுப்புக்களை ஒதுக்க முடியாமல் இடர்ப்படுகின்றது.

## ஒப்பிடல்

அளவுகருவி இல்லாதபோது பொருள்களை ஒன்றனோடு ஒன்று ஒப்பிட்டுச் சீர்தூக்குதல்தான் வழி. தராசு இல்லாத போது இரண்டு வெல்ல உருண்டைகளைக் கையால் எடுத்துச் சீர்தூக்குதல் போன்றது இது. இவ்வாறு சீர்தூக்கும்போது விருப்புவெறுப்புக்கு இடங்கொடுக்காமல் பற்றின்றி ஆராய்ந்தால் ஓரளவு உண்மை புலனாகும்.

பாட்டுக்களின் உயர்வு தாழ்வு ஆராய்வோர்க்கும் இவ்வாறு ஒப்பிடுதல் ஒன்றே வழியாக உள்ளது.

கூந்தலின் மணம் பற்றித் தும்பியை நோக்கி வினவிய தலைவனும், பல பூக்களின் மணத்தோடு அதை ஒப்பிட்டுச் சீர்தூக்கி உரைக்குமாறு வேண்டுகின்றான். "நீ அறியும் பூக்களில் அரிவை கூந்தல் போல் நறுமணமானவை உள்ளனவோ?" என்று கேட்கின்றான்.

பொதுவான அளவுகருவி இல்லாமல் ஒப்பிட்டு அறிய வேண்டியிருத்தலால் விருப்புவெறுப்புக்கள் உண்மையைத் திரித்தல் கூடும். அதனால்தான்

"காமம் செப்பாது கண்டது மொழிமோ" என்ற எச்சரிக்கை தேவையாக உள்ளது. ஒருவன் உடம்பின் சூட்டைச் சூடுஅறி கருவி (thermometre) வாயிலாக அளக்கும் போது, "உன் விருப்பமானதைச் சொல்லாதே; உண்மையாகக் கண்டதைச் சொல்" என்று எச்சரிக்கை செய்ய வேண்டுவதில்லை. அந்தக் கருவியுள் எவருடைய விருப்பும் வெறுப்பும் புகுவதற்கு வழி இல்லை; அது பொதுவானது. நல்லார்க்கும் பொல்லார்க்கும் மதியார்க்கும் மதிப்பவர்க்கும் பொதுவானது; மாறுபட்ட பலதிறக் கருத்தினருக்கும் பொதுவானது. மாறுபட்டோர் பலரும் உடன் இருந்து உண்மை அறிவதற்கு அது வாய்ப்பளிக்கின்றது. இத்தகைய வாய்ப்பு இலக்கிய ஆராய்ச்சியில் இல்லை. அவர் போற்றுவதை இவர் தூற்றவும், இவர் உயர்த்துவதை அவர் இழிவுபடுத்தவும் இங்கு இடம் உண்டு. இந்தக் காரணத்தால் இது அதனினும் உயர்ந்தது என்று மாறுபட்டோரும் உடன்படும் வகையில் விளக்குவதற்கு இங்கு வழி இல்லை. அதனால் தான் "காமம் செப்பாது கண்டது மொழிமோ" என்ற எச்சரிக்கை இலக்கிய ஆராய்ச்சியாளர்க்குத் தேவையாகின்றது.

**மணம் : நயம்**

மலரின் மணம் கூந்தலின் மணம் இவற்றைச் சீர்தூக்கி ஆராயும் கருவி புறத்தே இல்லை. மனமே இருவகை மணத்தின் சிறப்பையும் அறிய வல்லது. ஆதலின் வண்டு தன் விருப்புக் கொண்டு மலரின் மணமே சிறந்தது என்று கூறிவிடலாம்; அல்லது தான் வாழும் நாட்டுத்தலைவன் என்ற விருப்புக் கொண்டு அவனுடைய மனக்குறிப்பை அறிந்து

கூந்தலின் மணமே சிறந்தது என்று கூறிவிடலாம். "இவ்வாறு விருப்புக் கொண்டு ஏதேனும் ஒன்றைச் சொல்லாதே. உள்ளவாறு கண்ட உண்மையைச் சொல்" என்கிறுன் காதலன்.

உண்மையை அளந்தறியும் கருவி வேறொன்று இல்லாதபோது, மனமே அளக்கும் கருவியாக அமையும்போது இத்தகைய இடர்ப்பாடு நேர்கிறது.

இலக்கிய ஆராய்ச்சியும் இத்தகையதே. இலக்கியத்தின் சிறப்பை அளந்தறிவதற்குப் புறத்தே கருவிகள் இல்லை. இலக்கியத்தைக் கற்று உணரும் உள்ளமே அதற்கு அளவுகருவியாக அமைகிறது.

மலர்களின் தாது தேன் இவைகளை ஆராய்ந்து நுகர்வது ஒன்றே தும்பியின் வாழ்க்கை. அதுவே வாழ்க்கையாக அமைந்த தும்பியாயினும் – கொங்குதேர் வாழ்க்கை பெற்ற தும்பியாயினும்—உண்மையை உள்ளவாறு உரைத்தல் அரிதாகிறது. எப்படியோ விருப்பு வெறுப்பு நுழைந்து உண்மையை மறைக்க இடம் உள்ளது.

பல நல்ல நூல்களை ஆராய்ந்து நயம் உணர்வது ஒன்றே கலைஞரின் குறிக்கோளான வாழ்க்கை. அதுவே வாழ்க்கையாக அமைந்த கலைஞராயினும் – நவில்தொறும் நயம்கண்டு மகிழும் புலவரே ஆயினும்– ஒரு நூலின் சிறப்பு இவ்வளவாகும் என்று உண்மையை உள்ளவாறு உரைத்தல் அரிதாகின்றது. எவ்வாறே விருப்பும் வெறுப்பும் நுழைந்து உண்மையை மறைத்தலும் உண்டு.

## குற்றம் கூறல்

காரணம் என்ன? இலக்கிய ஆராய்ச்சியும் உள்ளத்து உணர்வையே அடிப்படையாகக் கொண்டது.

அதனால் நக்கீரனார் போன்ற பெரும்புலவரும் ஒரு பாட்டின் உயர்வை அளந்தறிய முடியாமல், விருப்பு வெறுப்புக்கு ஆளாகும் மனத்தால் நடுநிலையில் நிற்க முடியாமல், தவறினும் தவறக் கூடும்; தாம் காண வேண்டிய உண்மையைக் கண்டு உரைக்க முடியாமல், குற்றம் இல்லாத ஒன்றைக் குற்றம் உடையது என்று கூறி இடர்ப்படவும் நேரும்.

## நிறமும் மணமும்

மலர்களின் நிறங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி நிகழ்த்த முடியும்; கண்ணே கருவியாக நிறத்தின் சிறப்பை ஒருங்கே அளந்தறிய முடியும். இதன் நிறத்தைக் காணும்போது அதன் நிறம் மறைவதில்லை; அதுவும் அடுத்தாற் போல் உள்ளது. அதைக் காணும் போது இது மறைவதில்லை. ஆனால், இதன் மணம் நுகரும்போது அதன் மணம் இல்லை; அதன் மணம் நுகரும்போது இதன் மணம் இல்லை. ஆதலால் அளந்தறிவதில் இடர்ப்பாடு உள்ளது.

இருவகை நூலை அல்லது இரண்டு பாட்டை ஒப்பிட்டு ஆராயும்போது அவற்றின் சொற்களை அளவிட முடியும். ஆயின் அவற்றின் கற்பனைச் சிறப்பை, நயத்தை ஒருங்கே உணர்ந்து அளவிட முடிவதில்லை. ஒன்றில் மனம் ஈடுபட்டுத் திளைக்கும் போது இதுவே சிறப்புடையதாகத் தோன்றுகிறது; இதை விட்டு மற்றொன்றன் நயத்தை உணரும் போது அதுவே சிறப்புடையதாகத் தோன்றுகிறது. கற்பவரின் உள்ளம் அவ்வப்போது ஒவ்வொன்றில் திளைத்து மூழ்குகிறது. இரண்டையும் ஒருங்கே வைத்து உணர்வதற்கு வழி இல்லை.

மலர்களின்மணத்தை விட்டு அவற்றின் காம்பு களின் நீளத்தையோ இலைகளின் அகலத்தையோ அளந்தறிவது மிக எளிதாக உள்ளது. அளக்கும் கருவிகள் எளியனவாக உள்ளன. இலக்கிய இன்பத்தை விட்டு நூல்கள் எழுந்த காலங்களையோ அவற்றின் வரலாறுகளையோ அளந்தறிவதும் எளிதாக உள்ளது. அளக்கும் கருவிகள் எளியன; சான்றுகள் தக்கன கிடைப்பின், அளக்கும் முயற்சியில் இடர்ப்பாடும் இல்லை. அறிந்த அளவுக்கு அறுதியிட்டு உரைக்க முடியும்.

ஆனால் இலக்கியத்தின் நயத்தை ஒப்பிட்டுச் சீர்தூக்கி ஆராய்தல் அருமையினும் அருமையாக உள்ளது.

## கற்பனைக் களஞ்சியம்

இப் பாட்டு, தோன்றிய நாள் முதல் பலர்க்கும் பலவகைக் கற்பனைகளையும் ஆராய்ச்சிகளையும் தூண்டி வரும் பழம்பாட்டு. அறிவியல் உலகில் நின்று ஆராய்ச்சியைப் பெரிதும் வளர்த்துவரும் இக்காலத்தினராய நமக்கும் இது ஒருவகைக் கற்பனையையும் ஆராய்ச்சியையும் தூண்டுகின்றது. பலரும் பலவாறு எண்ணி உணர்ந்தது போலவே இப் பாட்டைப் படிக்கும் நாமும் பற்பல எண்ணி உணர வாய்ப்பு உள்ளது. தொடக்கக் காலம் முதல் இவ்வாறு கற்பனைக் களஞ்சியமாகவும் ஆராய்ச்சித் தூண்டுகோலாகவும் விளங்குவதால்தான் மிகச் சிறந்த பாட்டாக அன்றும் விளங்கியது; இன்றும் விளங்கிவருகிறது.

இந்தப் புதிய கற்பனை உலகிலே, செந்நாப் புலவர்களே கொங்குதேர் வாழ்க்கைத் தும்பிகளாகக்

காட்சியளிக்கின்றனர். கற்பனையே சிறகு ஆகின்றது. இலக்கிய உலகமே சோலை ஆகின்றது. ஆராய்ச்சி என்னும் காதலன் இலக்கிய நயம் என்னும் காதலியைப் பாராட்டுகிறான். பயிலியது கெழீஇய நட்பு அந்தக் காதலியிடம் அமைந்துள்ளது; மயிலியலும் அமைந்துள்ளது; செறியெயிறும் உள்ளன. நீ அறிந்தனவற்றுள் இதுபோல் சிறந்தனவும் உள்ளனவோ என்னும் வினாவும் எழுகின்றது.

## இன்றைய உதவி

நாம் விரும்பும் நூலாயின், அதற்காகப் பொற்கிழி அளிக்கலாம் என மனம் முந்துகிறது. விரும்பாத நூலாயின், எத்துணைச் சிறப்பு வாய்ந்தவர் முன்வந்து போற்றினும், குற்றம் குற்றமே எனக் கூற முந்துகிறது.

ஆயின், கொங்குதேர் வாழ்க்கைக்கு – நூல்நயம் தேர்ந்தறியும் வாழ்க்கைக்கு – நடுநிலைமை வேண்டும்; காமம் செப்பாது கண்டது மொழியும் திறன் வேண்டும்.

கொங்கு தேர்ந்தறியும் இயல்பே தும்பியை வளர்ப்பது; வாழ்விப்பது; நல்ல தேனை நாடி உண்ணச் செய்து வாழ்வளிப்பது அந்த இயற்கைத் தன்மையே. நூல்நயம் தேர்ந்தறியும் புலமையே புலவரை வளர்ப்பது; வாழ்விப்பது. நல்ல நூலை நாடிக் கலைவிருந்து நுகரச் செய்து வாழ்வளிப்பதும் அந்தப் புலமையே ஆகும். தலைவன் தலைவி மலை மலர்களின் தொடர்பு கருதி நடுநிலை பிறழ்தல் தும்பியின் இனிய வாழ்வுக்குத் தீங்கு. புரவலன், பரிசில், நாடு, புகழ் முதலியவற்றைக் கருதி நடுநிலை பிறழ்தல் புலவரின் கலைவாழ்வுக்குத் தீங்காகும்.

ஒரு கருத்தை ஆராய்வதற்காக எழுந்தது இப் பாட்டு என்று கதை கூறுகிறது. பிறகு, இப்பாட்டின் தகுதியே ஆராயப்படுவதாயிற்று என்றும் கதை கூறு கிறது.

இன்று இப்பாட்டின் உயரிய கருத்துக்கள் மற்றப் பாட்டுக்களின் பெற்றியை ஆராய்வதற்கு உதவியாக நிற்கின்றன. ஆராய்ச்சிக்கு உரிய பொருளாக நின்ற பாட்டு, ஆராய்ச்சிக்கு உதவும் கருவியாக நிற்கிறது. குற்றமுடையதா குற்றமற்றதா என்று ஆராயப்பட்ட பாட்டு, இன்று எத்தனையோ காவியங்களின் குற்றங் களையும் குணங்களையும் சீர்தூக்க வழிகோலி உதவு கிறது. வாழ்க புலமைத் தும்பிகள்! வாழ்க கொங்கு தேர் வாழ்க்கை!

3814

சென்னை அரசாங்கத்தின் பரிசு பெற்றவை :

**கள்ளோ ? காவியமோ ?** (புனைகதை)
**அரசியல் அலைகள்** (கட்டுரைகள்)

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றவை :

**திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்** (ஆராய்ச்சி)
**விடுதலையா ?** (சிறுகதைகள்)
**மொழிநூல்** (ஆராய்ச்சி)